பொதுசன நூலகம்
... படிப்பகம்
...சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
THINAMURASU

தினப்பதிப்பு

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C/638)
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 05 திங்கட்கிழமை (18.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 201

# சர்வதேசத்தின் கண்காணிப்புடன் தமிழர்களுக்கு தனி அதிகார அலகு

## - இதுதான் ஐ.நா. நிபுணர் குழுவின் கனவு -

(நியூயோர்க்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினையான அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான அதிகபட்ச சுமுகத் தீர்வாக சர்வதேசக் கண்காணிப்புடனான தனி அதிகார அலகு ஒன்றை உருவாக்கிக் கொள்வதே சிறந்த தீர்வாகும் என்று ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கையில் சிபார்சு ஒன்று முன்மொழியப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்கு கசிந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிபுணர் குழு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்திருக்கும் அறிக்கையின் முழுவிபரங்கள் எதுவும் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. எனினும் அந்த அறிக்கையில் முன்மொழியப்பட்ட ஒரு சில விடயங்கள் ஊடகங்களுக்கு அரசல் புரசலாக கசிந்துள்ளது.

இத்தகவல்களின்படி தமிழர்களுக்கு தனியான அதிகார அலகு வழங்கப்படவேண்டும் என்பதுடன், அந்த அதிகார அலகு சர்வதேச சமூகத்துக்குப் பொறுப்புக் கூறும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டிய அதேசமயம் இந்த அதிகார அலகு. சர்வதேசத்தின் கண்காணிப்புக்குள்ளும் இயங்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் மேற்படி நிபுணர்குழுவின் அறிக்கையில் முன்மொழியப்பட்டிருக்கிறது.

# நடந்து முடிந்தது யுத்தம் அல்ல; அது மனிதாபிமான நடவடிக்கையே

## இப்படிக் கூறுகிறார் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர்

(கொழும்பு)

உலகெங்குமுள்ள தமது நலன்களை பாதுகாப்பதற்காக யுத்தத்தில் ஈடுபட்ட ஏனைய நாடுகளைப் போல் அல்லாமல் நாட்டின் பிரஜைகளை பாதுகாப்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையையே இலங்கை மேற்கொண்டதாகவும், அந்நடவடிக்கையின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை எனவும் அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மகாநாயக்கரான அதி வண. உடகம புத்தரகித்த தேரர் கூறியுள்ளார்.

பயங்கரவாத அமைப்பொன்று நாட்டு மக்களைப் படுகொலை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச அழுத்தத்துக்கு எதிராக மே தினத்தில் திரண்டு எழுவோம்



## வலிமையை வெளிப்படுத்த ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

**ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக பாரிய எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத் துள்ளதாக ஜனாதிபதியின் அலுவலகம் நேற்று அறிவித்துள் ளது.**

**நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி, எதிர்வரும் மே தினம், போர்க்குற்றங்களுக்கு எதிரான விசாரணையை நடத்த வேண்டுமென்ற சர்வதேசக் கோரிக்கைகளுக்கு எதிராக எமது வலிமையை வெளிப்படுத்துவதற்கான தினமாக அமைய வேண்டுமெனக் கூறியுள்ளார்.**

**(11 ஆம் பக்கம் பார்க்க)**

# புலி ஆதரவுப் பிரமுகர்களை தேடித்தேடி கைது செய்யுங்கள்

## இராணுவப் பேச்சாளர் ஆவேசம்



(கொழும்பு)

புலம்பெயர் நாடுகளில் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் தமிழ் அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று இராணுவப் பேச்சாளர் உபய மெதவல வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறான நபர்கள் இலங்கை தொடர்பிலான தப்பபிப்பிராயத்தை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# பாணின் விலை அதிகரிக்குமா?

(கொழும்பு)

பிறீமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை அதிகரிக்கும் பட்சத்தில் பாணின் விலையையும் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது செரண்டிப் நிறுவனம் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை மூன்று ரூபாவால் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் பிறீமா நிறுவனமும் கோதுமை மாவின் விலையை அதிகரிக்குமானால் தமது உற்பத்திப் பொருட்களின் விலைகளையும் அதிகரிக்க வேண்டி வரும் என பேக்கரி உரிமையாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# ஐ.நா.அறிக்கையில் அரசியல் நோக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, அடிப்படைத் தன்மை அற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அது முற்றுமுழுதாக அரசியல் நோக்கத்தை கொண்டுள்ளமை தெளிவாக வெளிப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையிலும் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அறிக்கைகளிலும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் இடையே எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லை என அவர் தெரிவித்தார்.

# கிழக்கு நோக்கிப் படையெடுக்கும் அரபு உலகின் முஸ்லிம் பிரமுகர்கள்

## கிழக்கின் குட்டை குழம்புமா?

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்துக்கு அண்மைக் காலமாக அரபு நாடுகளிலிருந்து முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்ற தோரணையில் அதிகளவான அரேபிய மொழி பேசும் முஸ்லிம் பிரமுகர்கள் அடிக்கடி படையெடுத்து வருகை தருவதாக கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரமுகர்களின் நடமாட்டத்தை இலகுபடுத்துவதற்காக காத்தான்குடி நகர சபை தனது பிரிவுக்குள் உள்ள வீதிகளின் பெயர்ப்பலகையில் அரபு மொழியையும் மேலதிகமாகப் பயன்படுத்தியுள்ளது.

காத்தான்குடி பிரதேசத்தில் அதிகளவான முஸ்லிம்கள் வசித்து வருவதினால் இந்தப் பிரதேசத்திற்கு தப்லீக் ஜமாத் மற்றும் தஹ்வா என்ற முஸ்லிம் அமைப்புகளின் பிரமுகர்கள் என்று கூறிக் கொண்டு வருகை தரும் அரபியர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாகவும், வீதிகளை இலகுவாக அவர்கள் அடையாளம் காண்பதற்காகவே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்கு மேலதிகமாக நான்காவது

(11 ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே**

**☞ உள்ளே கல்வி முரசு**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# நிபுணர் குழுவின் அறிக்கையால் மகிந்தவின் கரங்கள் பலப்படும்

## சர்வதேச ஊடகம் ஆரூடம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை இலங்கை அரசாங்கம் தொடர்பில் சர்வதேச ரீதியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும், உள்நாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கரங்கள் வலுப்பெறுவதற்கே வழிவகுக்கும் என சர்வதேச ஊடகம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

இவ் விவகாரம் தொடர்பில் உறுதியான வெளிவிவகாரக் கொள்கைகள் எதனையும் கொண்டிராத சர்வதேச நாடுகள் சில ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கத் தயாராகவுள்ள நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தொடரும் என இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

உலகின் பல்வேறு இடங்களில் இருந்து நிபுணர்கள் குழுவுக்கு கிடைக்கப் பெற்ற ஆயிரக் கணக்கான சாட்சியங்களில் சில தவறான தகவல்களைக் கொண்டிருந்த அதேவேளையில், நிபுணர்கள் குழுவின் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் முனைப்பிலும் சாட்சியங்கள் சில அனுப்பப்பட்டுள்ளதாக நம்பகமாகத் தெரிய வருவதாக இவ்வூடகம் சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் Eurasia Review எனும் இணையத் தளத்தில் ஊடகவியலாளர் Nilantha Ilangamuwa என்பவர் எழுதியுள்ள நீண்ட செய்திக் கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. அச்செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான விடயங்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் தேசிய உணர்வை மேலும் அதிகரிக்கவே செய்யும். இதனால் இலங்கை அரசாங்கத்திற்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவு அதிகரிக்கும். இந் நிலையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபை எந்தளவு வெற்றி பெறும் என்பது கேள்விக்குறியே.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் தனது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை லிபியா, ஈராக், சீனா மற்றும் மியான்மார் போன்ற நாடுகளின் கடும்போக்குக் கொண்ட ஆட்சியாளர்களே வழிநடத்துகின்றார்கள். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் மேற்குறிப்பிட்ட நாடுகளின் ஆட்சிப் பண்புகளை அதிகம் காணக்கூடியதாக இருக்கின்றது.இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வந்த பயங்கரவாதத்தை வெற்றி கொண்டு மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த தன்னை மக்கள் தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க வேண்டும் என்றே மகிந்த ராஜபக்ஷ எதிர்பார்க்கின்றார். அரசியல் நிலைமைகளை தனக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்வதில் மகிந்த ராஜபக்ஷ மிகவும் திறமைசாலி.

இலங்கை அரசியலில் எதிர்க் கட்சிகள் மிகவும் பலவீனமான நிலையிலேயே இருப்பதுடன், அந் நாட்டின் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பலம்வாய்ந்த மனிதவுரிமை அமைப்புக்களும் அங்கில்லை. இந்தியாவைப் போன்று மக்கள் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஊடகங்களோ, பொதுவமைப்புக்களோ இலங்கையில் காணப்படவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிப் பாணியை ஒத்ததே லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியின் ஆட்சிப் பாணி இறுதியில் 30 ஆண்டு களின் பின்னர் தனக்கு எதிராக ஏற்பட்டிருக்கும் மக்கள் கிளர்ச்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலைமைக்கு அவர் உட்பட்டுள்ளார்.ஆனால், இத்தகைய கிளர்ச்சிகள் இலங்கையில் தற்போது ஏற்படுவதற்கான வாய்ப்புகளோ, வலுவான எதிர்க் கட்சிகளோ அங்கில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

# இடியுடன் கூடிய மழை

(கொழும்பு)

இடியுடன் கூடிய மழை நாட்டின் பல பாகங்களில் பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த காலநிலை இந்த மாத இறுதிவரையில் தொடரும் என கடமை நேர வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி சமிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

# கீரிமலையில் குவிந்தனர் மக்கள்



(யாழ்ப்பாணம்)

சித்திராப் பௌர்ணமியை முன்னிட்டு பெருமளவான மக்கள் கீரிமலையில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இங்கு பிதிரக்கடன்களை நிறைவேற்றினர். நீண்ட வருடங்களுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள சுமூகமான நிலையில் இங்கு மக்கள் மகிழ்வுடன் வழிபாடுகளில் ஈடுபட்டிருந் தமையினைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, யாழ்.வில்லுண்டிப் பகுதியில் பெருமளவான மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

# இன்று பூங்காவன உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இமையாணன் மேற்கு நவாலி கண்ணகை அம்மன் ஆலய பூங்காவன உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 6மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பட்டிமன்றக்குழு வழங்கும் பட்டிமன்றம் இரவு 9.30 மணிக்கு இடம்பெறும்.

இன்றைய குடும்பங்களில் பெரிதும் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் உறவினர்களா? அயலவர்களா? என்னும் பொருளில் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் இப்பட்டிமன்றம் நடைபெறும். (10)

# அமைச்சரின் விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பணியாற்றுகின்ற கடமை நிறைவேற்று அதிபர்கள் இன்று காலை 10 மணிக்கு பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தமது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர். எனவே, அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களையும் இன்று காலை 9 மணிக்கு ஆரியகுளத்திற்கு முன்பாக ஒன்று சேருமாறு மாவட்டக் கடமை நிறைவேற்று அதிபர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

# மருத்துவர் இல்லாத மருத்துவமனை இது மருதங்கேணியின் அவலம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மருதங்கேணி வைத்தியசாலையில் இரவு நேரத்தில் வைத்தியர்கள் இல்லாததால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பிரசவவலி காரணமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் குழந்தை பிறந்ததால் குறித்த பெண்ணைப் பராமரிப்பதற்கு வைத்தியரோ, பெண் தாதியர்களோ இல்லாததால் அங்கு கடமையில் இருந்த ஊழியர் ஒருவரும் நோயாளர் காவு வண்டிச் சாரதியும் இணைந்து குறித்த பெண்ணை கொடிகாமம் வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதே நிலைமையே பளை வைத்தியசாலையிலும் நிலவிவருவதாக மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் இரவு நேரங்களில் வைத்தியசாலைக்கு வருகின்ற போது வைத்தியர்கள் இல்லாததால், சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இந்த விடயத்தில் சுகாதாரப் பணிமனை அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (70)

## சீரணி அம்மன் தீர்த்த உற்சவம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவத் திருவிழா இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்த்தோற்சவ நிகழ்வில் பெருமளவான அடியார்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த இரு மாத காலப் பகுதியினுள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக உத்தரவு பெற்றுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து சங்கத்தின் செயலாளர் மக்கீன் கருத்து தெரிவிக்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுச் செல்பவர்களின் எண்ணிக்கை சுமார் 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், இதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் அந்நிய செலவாணிகள் நூறுகோடி ரூபாவினால் குறைவடையலாம் எனவும் சங்கத்தில் செயலாளர் குறிப்பிட்டார்.

## விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கல்விப்பொதுத்தராதர சாதாரண தரத்தில் ஆங்கிலம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும் என யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (கா)

# சிறுமி காப்பாற்றப்பட்டார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தில் சிறுமி ஒருவர் கிணற்றில் வீழ்ந்து அயல வர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

தனது தோழிகளுடன் கிணற்றுக் கட்டில் விளையாடிக் கொண்டிருந்த சமயம் கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளார். இவருடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுமிகள் பெரும் குரலில் அலறுவதைக் கேட்ட அயலவர்கள் கிணற்றில் வீழ்ந்த சிறுமியை மீட்டுள்ளனர். திலீப்குமார் சுலோசனா (வயது-11) என்ற சிறுமியே கிணற்றில் வீழ்ந்தவராவார். (110)


**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு** PC House PLC **நிறுவனத்தில் கொள்வனவு செய்யும்** Desktop Computer **மற்றும்** Laptop Computer **உடன்** Karbonn K.316 **கைத்தொலைபேசி மற்றும்** Antivirus **இனை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்**



கைத்தொலைபேசி இலவசம் Antivirus

PC House PLC
1K, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0214920572, 0777555855
U-shukoor@pch.lk, jaffna@pch.lk

(C/691)

## சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி-கோணாவில் பிரதேசத்தில் யூனியன் குளம் பகுதியில், (05) ஐந்து ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்குண்டு

தொடர்புக்கு : 0773289577

(C/519)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை வேதநாயகம்

**வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்**



வடமராட்சி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், இல.98, கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வேதநாயகம் 14.04.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை (18.04.2011) 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப், பூதவுடல் கொழும்புத் துறை, துண்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212228016 (116) தகவல் : குடும்பத்தினர்.

தியானமும், சிந்தனையும் சதாகாலமும் செய்ய வேண்டும். தியானம் சிந்தனைக்கு வளர்ப்புத் தாய். சிந்தனை தியானத்துக்கான உணவு.

-ஸி.ஸிம்மன்ஸ்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நிபுணர்குழுவின் அறிக்கை பெறும் முக்கியத்துவம் என்ன?

பல்வேறு சர்ச்சைகளின் மத்தியில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீமூனிடம் நிபுணர்குழு சமர்ப்பித்திருந்த இலங்கையின் போர்க்குற்ற அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட இரகசியங்களை ஊடகமொன்று அம்பலத்துக்கு கொண்டுவந்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது யுத்தத்தில் ஈடுபட்ட அரசும், புலிகளும் மனித உரிமைச்சட்டங்களை மீறும் வகையில் நடந்து கொண்டதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்தம் நடைபெறும் எந்தவொரு நாட்டிலும் மனித அழிவுகள்,சொத்தழிவுகள்,இடப்பெயர்வுகள் எல்லாம் சர்வசாதாரணமாக ஏற்படக்கூடிய சம்பவங்களே. எந்தவொரு தரப்பினரையும் குற்றம் சாட்டமுடியாது.இருதரப்பினருமே இச்செயல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

இந்தப்பொறுப்பிலிருந்து எவருமே தப்பிக்கமுடியாது.இந்நிலையில் வன்னியில் ஏற்பட்ட இறுதி யுத்தமும் அதனால் ஏற்பட்ட அழிவுகளுக்கும் ஒரு சாராரை மட்டும் குற்றம் சாட்டுவதால் பயனேதும் ஏற்படப்போவதில்லை.

புலிகள் எதிர்பார்த்திராத வகையில் வன்னியில் இடம்பெற்ற இறுதியுத்தம் அவர்களை வாழ்வா? சாவா? என்ற நிலைக்குத் தள்ளிவிட்டதாக அரசியல் விமர்சகர்களும், யுத்த ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இவர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையிலேயே ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அமைந்திருப்பதைக்காண முடிகின்றது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அப்பாவிப் பொதுமக்களின் அநியாய உயிரிழப்புக்களுக்கு காரணமாக அமைந்தது புலிகள் கடைப்பிடித்த யுத்தத் தந்தி ரோபாயங்களே என நிபுணர்கள் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது மக்களை வெளியேற விடாது தடுத்தமை, யுத்தம் நடைபெற்றபோது மக்களைப் பயணக்கைதிகளாகப் பயன்படுத்தியமை, தமது பாதுகாப்புக்காக பதுங்கு குழிகளை அமைக்க நிர்பந்தித்திருந்ததுடன், புலிகளையும் மக்களையும் இனங்காணமுடியாதவாறான நிலையை ஏற்படுத்தியிருந்தமை, சிறுவர்களையும் அனைத்து வயதினரையும் ஆண், பெண் வேறுபாடில்லாமல் வலுக்கட்டாயமாகச் சேர்த்தமை, மக்களோடு மக்களாக இருந்து தாக்குதல் நடத்தியமை, தப்பிச்செல்ல முயன்ற மக்களைக் கொன்றமை, மூத்த தலைவர்களைப்பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகள் என்று எல்லாமே மக்களின் அழிவுகளை அதிகப்படுத்தின என்று பல்வேறு குற்றச்சாட் டுக்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிபுணர்கள் குழு அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்குப்பதிலளிக்க அரசாங்கம் இராஜதந்திர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகவும், அறிக்கை தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிஎம்.பிக்கள் எதுவித கருத்தும் தெரிவிக்கக்கூடாது என்று கட்சியின் மேலிடம் எச்சரித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுக்கும் புலிகளுக்குமிடையே யுத்தம் நடைபெற்றதென்பது சர்வதேசம் அறிந்த உண்மை இதனை எவரும் மறுதலித்துக்கூற முடியாது.எனினும்

யுத்தம் நடைபெற்றபோது மக்களை வெளியேற்றுவதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டும் என்று கூறாத சர்வதேசம், யுத்தத்தை நிறுத்துவதற்கு மட்டும் அரசுக்கு அழுத்தம் கொடுத்திருந்தது.

சமாதானத்தூதுவராக செயற்பட்ட நோர்வே தூதுவர் கூட எதுவும் பேசாது மௌனமாக இருந்துவிட்டு நிபுணர் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு இன்று கோரியுள்ளமையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

பான்கீமூன் இரகசியமாக பொத்திவைத்திருந்த அறிக்கை இன்று பரகசியமாக பல உண்மைச்சம்பவங்களை அம்பலத்துக்குக் கொண்டுவந்துள்ள நிலையில், யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இருதரப்பில் ஒரு தரப்பு அழிக்கப்பட்ட நிலையில்,நிபுணர்குழுவின் இவ்வறிக்கை பெறப்போகும் முக்கியத்துவம் என்ன என்பதை மனிதவுரிமை ஆர்வலர்கள் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் எடுத்துக்கூறுமா? -ஆசிரியர்-

# மன்னார் முசலி பகுதி மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு கடற்படையினரால் புதிய நிபந்தனைகள் விதிப்பு

(மன்னார்)

மன்னார், முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரிப்பு கிராம மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்காகக் கடற்படையினர் தற்போது புதிய நிபந்தனைகளை விதித்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மாதம் 14 ஆம் திகதி முதல் வீச்சு வலை, தங்கூசி வலை, சுருக்கு வலை போன்ற வலையினைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கான அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்படி வலைத் தொகுதிகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த மீனவர்கள் தொடர்ந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அது மட்டுமின்றி கடலுக்குள் செல்லும் மீனவர்களுக்கு கடற்படையினரால் அறிமுகப்படுத்தப்பட் டுள்ள "பாஸ்'' நடைமுறையில் புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளனர்.

அண்மைக் காலமாக வழங்கப்பட்டு வந்த பாஸ் மீனவர் ஒருவர் ஒரு நாள் முழுவதும் அதனை வைத்துத் தொழில்ல் ஈடுபட முடியும். ஆனால் தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள புதிய பாஸ் நடைமுறையின்படி ஒரு நாளைக்கு மீனவர் ஒருவர் எத்தனை தடவை கடலுக்குச் சென்றாலும் அத்தனை தடவை கடற்படையினரிடம் சென்று பாஸ் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மீனர்கள் உரிய நேரத்திற்கு தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது மட்டுமின்றி அல்லிராணிக் கோட்டை அமைந்துள்ள பகுதிக்கு மீனவர்கள் செல்ல முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை மட்டுமே கடலில் சென்று மீன்பிடிப்பதற்க்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் தொடர்ந்தும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் இரவில் மீனவர்களுக்குக் கடலில் திடீர் சுகவீனம் ஏற்பட்டால் கரைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## இளைஞர்கள் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம் தென்மராட்சி பெருங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தினருக்கும் இளைஞர் குழு ஒன்றுக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த் தர்க்கத்தை அடுத்து இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிவநாதன் அச்சுதன், சந்திசேகரம் மதுசன் ஆகிய இரு இளைஞர்களுமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

சாவகச்சேரியிலிருந்து மட்டுவிலிலுள்ள தமது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த இளைஞர்களது துவிச்சக்கர வண்டி ஒன்று இராணுவத்திற்கு உணவு எடுத்துச் சென்ற இராணுவச் சிப்பாயின் துவிசக்கர வண்டியுடன் பெருங்குளம் பகுதியில் மோதுண்டுள்ளது.

இதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த் தர்க்கத்தால் மேலதிக இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (11)

# கடல் அட்டைகள் கொழும்புக்கு ஏற்றுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாக்கடல் நீரேரிப் பகுதியில் அதிகளவான கடல் அட்டைகள் பிடிக்கப்பட்டு வருவதாக யாழ்.குடாப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் கடல் அட்டையின் இனப்பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் பெருமளவில் கடல் அட்டைகள் பிடிக்கப்பட்டு வருவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல் அட்டையொன்று 300 ரூபா முதல் கொண்டு 1,200 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதுடன், தென்பகுதி மீனவ வர்த்தகர்களினால் கடல் அட்டைகள் அதிகளவில் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடல் அட்டை பிடிபடும் காலம் ஆரம்பித்துள்ளதினால் யாழ்.குடாக் கடல் மீனவர்கள் பெருமளவில் இத்தொழிலில் ஈடுபட்டுவருவதாக வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் எஸ்.தவரெட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாக்கடல் மீனவர்களுக்கு இம்மாதம் தொடக்கம் எதிர்வரும் மாதம் வரை அதிகளவில் கடல் அட்டைகள் பிடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் பதவி விலக வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் டி.எம். ஜயரட்ண பதவி விலக வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிரதமரினால் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஓய்வு பெறும் வயதில் பதவிகளை வகிப்பதனால் எவருக்கும் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் வயதெல்லையொன்று காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல்வாதிகளுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் இவ்வாறு ஓய்வு பெறும் வயதெல்லை கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விளையாட்டு வீரர்கள் சுயமாகவே ஒரு குறிப்பிட்ட வயதில் ஓய்வு பெற்றுக் கொள்கின்ற போதிலும், அரசியல்வாதிகள் அவ்வாறு ஓய்வு பெற்று ஒதுங்குவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்களினால் விலகச் சொல்லி வலியுறுத்தப்படும் முன்னர் தாமாகவே அரசியல்வாதிகள் ஓய்வு பெற்றுக் கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி, பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாணசபை உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கப் போவதில்லை என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# ரணிலைப் பதவி விலக்கும் முயற்சியில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள்



(கொழும்பு)

சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ரணில் விக்ரமசிங்க பதவி விலக வேண்டுமென சில சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் ஐககிய தேசியக் கட்சி தகவல்களைத் திரட்டி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜெர்மன் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்று இந்தச் சூழ்ச்சித் திட்டத்திற்காகப் பெருந் தொகைப் பணத்தை செலவிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் குறித்து இராஜதந்திர வட்டாரத்திற்கு விளக்கமளிக்கப்பட உள்ளதாக ஐக்கிய தேசியக் கடசியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தகவல்களைத் திரட்டும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி ஜெர்மனிக்கு பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைக்க உள்ள தாகக் குறிப்பிடப்படுகிறது.

# சிறார்களின் வழமான எதிர்காலத்துக்கு அவர்களை நல்லமுறையில் வழிநடத்த வேண்டும்

## ஈ.பி.டி.பி நடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் முன்பள்ளிப் பிள்ளைகள் சிறந்த முறையில் வழிநடத்தப்பட வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் தம்மிடம் கற்கும் ஒவ்வொரு பிள்ளையையும் தனது சொந்தப் பிள்ளையாக எண்ணி அவர்களுக்குத் தேவையான நல்ல பயிற்சிகளை வழங்க வேண்டும்.

விளானை சனசமூக நிலையம் விளானை கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து நடாத்திய முன்பள்ளிப் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியிலும் ஆண்டு விழாவிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஈழமக்கள் ஜனநாயகக கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் இவ்வாறு குறிப்பிட்டார்.

புதுவருடத் தினத்தன்று விளானை சனசமூக நிலைய முன்றலில் முன்னாள் சனசமூக நிலையத் தலைவர் மு.சு.கந்தையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தொடர்ந்து உரையாற்றுகையில் -

1991 இடப்பெயர்வின் பின்னர் காரைநகர் பிரதேச மக்கள் பல்வேறு துன்பங்களையும் அனுபவித்துள்ளனர்.

நாம் கடந்த காலங்களில் இப்பிரதேச மக்களுடன் இருந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளோம்.

இப்பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்து காரைநகர் பிரதேச அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வருகின்றேன்.

அரசாங்கம் நடைமுறைப் படுத்தவுள்ள எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் உங்கள் காரைநகர் பிரதேசமும் உள்வாங்கப்படும் எனத் தெரிவித்தார்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பரிசில்களை வழங்கினார். (10)

# இருவேறு விபத்துக்களில் மூவர் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் மூவர் படுகாயமடைந்துள்ள நிலையில், யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் கைதடிப் பாலத்தடியில் கன்ரர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பசுபதிப் பிள்ளை நவரத்தினம் (வயது 60) என்பவரே காயமடைந்தார்.

இதேவேளை, இரவு 7.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் இருவர் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வல்லைப்பாலத்தடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் முச்சக்கர வண்டி மோதியமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த நாச்சி மார் கோவிலடியைச் சேர்ந்த ஏ.கேதீஸ்வரன்(வயது 24), மற்றும் எம்.கஜன்(கயன் 24) ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் அச்சுவேலி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (03,மி)

# 49 சீ.சீ ரக மோட்டார் சைக்கிள் பதிவு மூவாயிரத்தைத் தாண்டியும் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக மோட்டார் ஊர்திப் பதிவுக் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்ட 49 சீ.சீ ரக மோட்டார் சைக்கிள்களின் எணணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியுள்ளதாக யாழ்.செயலக மோட்டார் பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழமை நாட்களில் தினமும் 14 தொடக்கம் 15 வரையான இத்தகைய மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இத்தகைய மோட்டார் சைக்கிள்களை ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பதிவு செய்வதில் பாவனையாளர்கள் எதிர் நோக்கிய சிரமங்களின் காரணமாக இதற்கான காலஎல்லை மேலும் நீடிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய தினமும் 49 சீ.சீ ரக மோட்டார் சைக்கிள்கள் 14 தொடக்கம் 15 வரை யாழ். செயலக மோட்டார் பதிவுப் பகுதியினரிடம் பதிவுகளை மேறகொண்டு வருவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இத்த கைய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி 49 சீ.சீ. ரக மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் தமது பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவ் அதிகாரி மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு கிராம அபிவிருத்தி மற்றும் மகளீர் அபிவிருத்தி சங்கங்களின் சமாசப் பொதுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு சமாசத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (கா)

# உள்ளூர் விவசாயத்தின் அபிவிருத்தி எங்களின் கைகளிலேயுள்ளது...



உள்ளூர் விவசாயத்தைப் பற்றிய செய்திகளை எமக்குத் தேவையான விவசாய விஞ்ஞான செய்திகளுடன் உங்களைச் சந்திக்க இக்கைகளுக்கு இன்னொரு முகம் கிடைத்திருக்கின்றது. இச்செய்திகளில் எமது பண்டைய காலத்து விவசாய செய்திகள், நிகழ்வுகள் பற்றியும் அலசிப் பார்க்கலாம்.

உள்ளூர் விவசாயத்தின் மகிமைகளையும் அதன் பாரம்பரியத்தையும் அழகு தமிழில் உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான திறவுகோலாக இப் பத்திரிகை அமைந்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

எங்களது தேசத்தில் இருநத போர் மேகங்களெல்லாம் அகன்று இப போது வசந்தம் வீசத் தொடங்கியிருக்கின்றது. விவசாயத்தில் அதன் நடவடிக்கையில் போர்க் காலங்களில் இருந்த பாதிப்பு மெல்ல மெல்ல சீர் செய்யப் பட்டு அங்குமிங்குமாக இடம் பெயர்ந்த மக்கள் தங்களது இடங்களில் மீளக் குடியிருக்கும் வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

வன்னிப் பிரதேசத்தின் அநேகமான இடங்களில் பூச்சியத்திலிருந்து விவசாயத்தினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. அநேகமான விளைநிலங்களில் நீண்ட இடைவெளிக்குப் பின்பாக விவசாயச் செய்கை ஆரம்பித்திருக்கின்றது. இந்த மக்கள் இது வரை பட்ட இன்னல்களுக்கு விடிவுகாலம் போல தமது சொந்த விளைநிலத்திலே பயிர்ச்செய்கையைச் செய்து தமது வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப பொன்னான வாய்ப்பாக இதனைக் கருதினாலும் அவர்களிடமிருந்த சொத்துக்கள், சேகரித்து வைத்த முதல் இவற்றுடன் உறவுகளையும் தொலைத்திருக்கும் இந் நேரத்திலும் நொந்துபோன மனங்களுக்கு ஆறுதலும் தெம்பும் கொடுத்து அவர்களது வாழ்வாதாரத்தை மேலுயர்த்த விவசாய அபிவிருத்தியின் சில்லுகளை இழுத்தசைக்க வேண்டும்.

பல இடங்களில் பலமட்டங்களில் பலவித கருத்தரங்குகளில் வடமாகாண விவசாய அபிவிருத்தி பற்றி பலவாக தீர்மானங்கள் எடுக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருந்தாலும் அபிவிருத்தி செயற்பாடுகள் மக்கள் மயப்படுத்துவதை உறுதி செய்தல் வேண்டும். பலர் கூடிக்கதைத்து வரையப் படும் திட்டங்களுக்கு மக்களின் அடிப்படை வசதி, அவர்களின் சுயஇலாபமீட்டும் தன்மை இவற்றுடன் சிறந்த சந்தைப் படுத்தல் ஆகியனவற்றிற்கான அடித்தளம் பலமாக இடப்பட வேண்டும்.

தற்கால விவசாய அபிவிருத்தி என்பது போருக்குப் பின்னரான புதிய அத்தியாயமாகவே நோக்க முடியும். இந்த அபிவிருத்திக்கான திட்டமிடல் அனைவருக்கும் புதியதொரு அனுபவமாகவே இருக்கும். இவ்வாறான அபிவிருத்தியினைத் திட்டமிடும்போது அவரவருடைய அனுபவங்களை ஒன்றுதிரட்டி அதனைப் பயணிக்கும் பாதையாகக் கொண்டு செல்லுதல் தகும். அதேநேரத்தில் விவசாய அபிவிருத்திக்கான இலக்கு அனைத்து மக்களினதும் பிரச்சனைகள் மற்றும் அவர்களுக்குள்ள இடர்கள் என்பனவற்றை மையப்படுத்தி இம் மக்களினது வாழ்வாதார முன்னடைவை எட்டுவதற்காய் இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு பரவலாக உள்ளதை அவதானிக்கலாம்.

வடபகுதி விவசாய அபிவிருத்தியில் எட்டப்பட வேண்டியன.

வடமாகாணத்தில் நடைபெறவிருக்கும் விவசாய அபிவிருத்தியைப் பல கோணங்களில் வைத்து நோக்கலாம். தற்போதைய சூழ்நிலையிலிருக்கும் விவசாயப் பெருமக்களின் வாழ்வோட்டத்தைக் கருத்திற் கொண்டால்

1) இடம்பெயர்ந்து மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பும் மக்களது உணவுக்கான தேவையை பூர்த்தி செய்வதே உடனடி நடவடிக்கையாயிருப்பினும் அவர்களது விவசாய நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான உந்து சக்தி கொடுக்கப்பட வேண்டும்.

2) அவ்வப்போது இடம் பெயர்ந்தாலும் தங்களது விவசாயச் செய்கைகளைத் தொடரும் விவசாயப் பெருமக்களுக்கான சந்தை வாய்ப்பு உறுதி செய்யப்படுவதுடன், அவர்களின் விவசாய செய்கைகளுக்கான உபகரணங்களினுதவி வழங்கப்படுதல் வேண்டும்.

3) இடப்பெயர்வுகளின் பின்னர் விவசாய செய்கையில் ஈடுபடும் இளைஞர் சமூகத்தை ஊக்குவிக்க வேண்டியதும் அவசியமாகும். தவறினால் விவசாய செய்கைக்கான மனித வளத்தை நாம் இழக்க வேண்டியும் வரலாம்.

4) விவசாயச் செய்கையில் பாரம்பரிய முறைகளை ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்கலாம். விவசாயி எந்த விதத்திலும் நட்டமடையாதிருக்கும் வண்ணம் இப்பாரம்பரிய முறைகளை விரிவுபடுத்தலாம்.

5) பீடை நாசினிக்கு மாற்றீடான வழிமுறைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதே வேளையில் அவற்றினை முறையின்றிப் பிரயோகித்தலையும் கட்டுப்படுத்த வேண்டும். பீடைக்கட்டுப்பாட்டில் இரசாயன முறை தவிர்ந்த ஏனைய முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நல்லது.

6) விவசாய பயிர்ச்செய்கையை அதில் பயன்படுத்தும் உள்ளீடுகளை, செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பொறிமுறையை உருவாக்கி விரிவுபடுத்த வேண்டும். இதன்மூலம் தேவையற்று உணவு நஞ்சாதலைத் தவிர்க்க முடியும். பழங்களைப் பழுக்க வைத்தலில் கூட இவ்வாறான கண்காணிப்பு பொறிமுறை நிறையவே உதவி செய்யும்.

7) விவசாயச் செய்கையில் ஈடுபடும் இளையவர்களுக்குப் புதிதாக இங்கே அறிமுகமாகும் தகவல் தொழில் நுட்பத்தினது பயன்பாடு கிடைக்க வேண்டும். இதற்கான அனுபவங்களைத் தமிழ்நாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

8) உள்ளூர் உற்பத்திகளைச் சர்வதேச தரத்திற்குத் தரமுயர்த்திப் பெறுமதியேற்றம் செய்வதனையும் ஊக்கப்படுத்த வேண்டும். பனை, தென்னை போன்றவற்றிலிருந்து உருவாக்கப்படும் பொருட்களின் தரத்தை உயர்த்த பல வழிகளிலும் முயற்சிக்க வேண்டும்.

9) வீட்டுத்தோட்டத்தினை ஊக்குவித்து ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை, வீட்டுக் கழிவுகளைக் கூட்டுரமாக்கி அவரவர் தோட்டத்திலிருந்து பெறவழி செய்யலாம். இதில் குறிப்பிட்ட விடயங்களை இன்னும் விரிவாகத் தொடர்ந்து பார்ப் போம். வடபகுதி விவசாயத்தின் அபிவிருத்தியில் ஒவ்வொருவரும் இணைந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வாருங்கள்! எங்களூர் விவசாயத்தையும் விவசாயியையும் நாங்களே கை கொடுத்து ஊக்குவிக்க வேணடும். இது எமது கடமையுங்கூட.

பேராசிரியர் கு.மிகுந்தன்
தலைவர்,
விவசாய உயிரியல் துறை,
விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வவுனியா நகர சபைத் தெரிவில் சிக்கித் தவிக்கும் தமிழரசுக் கட்சி

(வவுனியா)

வவுனியா நகரசபைத் தலைவர் பதவி யாருக்கு வழங்குவது என்பதை முடிவெடுக்க முடியாத நிலையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தடுமாறுவதாக வவுனியா நகரசபைக்கு வரி செலுத்துபவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்டதொரு இடைவெளிக்குப் பின்னர் நகரசபை நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகளிடம் வந்த பின்னர் சபைச் செயற்பாடுகளில் மக்களுக்கு திருப்தியான சேவை இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சபை உறுப்பினர்களிடையே கருத்து மோதல் ஏற்பட்டுப் பல மாதங்களின் பின்னர் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் ஒரு மாதம் கடந்த நிலையிலும் புதிய தலைவரைக் கட்சி நியமிக்கவில்லை.

தற்போது சபையின் செயற்பாடுகள் யாவும் முடங்கியுள்ளதாகவும் உள்ளூராட்சி சட்டப் பிரகாரம் கட்சித் தலைவரை நியமிக்காதுவிடின் 90 நாட்களின் பின்னர் தேர்தல் ஆணையாளர் தேர்தலில் அடுத்தபடியாக அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவரை தலைவராகப் பிரகடனப்படுத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கடற்தொழிற் சங்கங்களுக்கிடையிலான கலந்துரையாடல் இன்று பூநகரி பரமன்கிராய் பாடசாலையில் காலை 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிறகுவலை மீன்பிடி சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக பிரதானமாக ஆராயப்படவுள்ளதுடன்,

இரு மாவட்ட மீனவர்களும் எதிர்நோக்கக்கூடிய ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

# மரக்கறி உற்பத்தியைத் துரிதப்படுத்தல் மூன்று நாள் தொழில்நுட்பப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மரக்கறி உற்பத்தியினைத் துரிதப்படுத்தல்" எனும் செயற்திட்டத்தின்கீழ் அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களின் வளவுகளிலும், விடுதி வளவுகளிலும், பாடசாலைகளின் வளவுகளிலும் மற்றும் தனியார் வீட்டுத் தோட்டத்தை ஸ்தாபிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மரக்கறித் தோட்டங்களை அமைத்தல் தொடர்பான ஒரு நாள் தொழில்நுட்பப் பயிற்சி நெறி இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை 3 நாட்களுக்கு தொடர்ச்சியாகத் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் காலை 9.00 மணிமுதல் நடாத்தப்படவுள்ளதாக யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி வகுப்பில் இருக்கக்கூடிய பௌதீக வளங்கள், காலநிலை என்பனவற்றிற்கமைவாக அமைக்கப்படவுள்ள தோட்டத்தைத் திட்டமிடல், கூட்டெரு தயாரித்தல், நாற்றுக்களின் உற்பத்தி, நடுகையும் பராமரிப்பும், பயிர்ப்பாதுகாப்பு முதலான விடயங்கள் குறித்துப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

குறித்த காலப்பகுதியில் பங்குபற்றுநர்கள் ஏதாவது ஒரு தினத்தில் இப் பயிற்சியில் பங்குபற்ற முடியும். பயிற்சியில் கலந்து கொள்ள விருக்கும் தினத்தினை, மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு கடித மூலமோ அல்லது தொலை பேசி மூலமோ (021 222 2175) அறிவிக்குமாறு அவா மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரதிச் செயலாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வே.தி.செல்வரத்தினம் இன்று முதல் வடக்கு மாகாண கல்வி அமைசகின பிரதிச் செயலாளராகக் கடமைப் பொறுப்பேற்கஉள்ளார். (கா)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சூரியன் அக்கடமி நிறுவனத்தால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட இலவச கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்வி நிறுவனத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்களை சமுகமளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (கா)

# பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் நள்ளிரவுத் திருடன் மாட்டிக்கொண்டான்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் நள்ளிரவு வேளையில் திருட முற்பட்ட திருடன் ஒருவன் கோபபாய் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையின் விளைவாக வகையாக மாட்டிக் கொண்டான்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

அண்மையில் கோப்பாய் மத்தியில் உள்ள வீடொன்றில் நள்ளிரவு வேளையில் சமையலறை யன்னல் ஊடாக உள்நுழைந்த திருடன் அங்கிருந்த நகைகள் மற்றும் பொருட்களைத் திருடிக்கொண்டிருந்த சமயம், சத்தம் கேட்டு விழித்துக்கொண்ட வீட்டார் கூச்சலிட்டதை அடுத்து அயலிலுள்ள பொதுமக்களும் வீட்டாரும் உடனடியாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை அடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற விசேட பொலிஸ் குழுவினர் குறித்த வீட்டைச் சுற்றிவளைத்துத் தப்பியோட முயன்ற திருடனைத் திருடிய நகைகளுடன் கையும்மெய்யுமாகப் பிடித்தனர்.

திருடனிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது குறித்த நபர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்ததுடன், அவர் திருடிய நகைகளும் மீட்கப்பட் டன.

இதன் பின்னர் பொலிஸார் குறித்த நபரை யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

விசாரணையை மேற்கொண்ட நீதிவான் குறித்த நபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், எதிர் வரும் 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

விரைந்து செயற்பட்டு திருடனை மடக்கிப்பிடித்த கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி மகிந்த குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப் பதிகாரி அறம் பொல மற்றும் ஏனைய பொலிஸாரின் செயலை அப்பகுதி மக்கள் பாராட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கா)



## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(18.04.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம் சித்திரை 05 ஆம் நாள்
இராகுகாலம்7.33 –9.33, சுபநேரம் 12.03 –1.33,
நட்சத்திரம் சித்திரை பி.ப 1.57 வரை
திதி: பூரணை பகல் 9.07 வரை,
சித்திரைத் சித்திரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– மனத்தில் நிம்மதி, குதூகலம், காரிய வெற்றி.

**ரிஷபம்:**– வீணான பயம், நற்செய்தி, பணவரவு.

**மிதுனம் :**– கழன உழைப்பு, பண விரயம், காரியத் தடை.

**கடகம்:**– போசனை அதிகம், பொருள் இழப்பு, வீண் விரயம்.

**சிம்மம்:**– மனமகிழ்ச்சி, காரியவெற்றி, பணவரவு.

**கன்னி :**– அதிக செலவு, பயம், அவமானம்.

**துலாம் :**– பெருமதிப்பு, பணவரவு, காரிய சித்தி.

**விருச்சிகம்:**– நற்செய்தி, நட்பு நன்மை, பண விரயம்.

**தனுசு:**– குதூகலம், தேகாரோக்கியம், பணவரவு.

**மகரம்:**– உட்பகை, நண்பர் உதவி, பொருட் செலவு.

**கும்பம் :**– வீண்பயம், காரிய வெற்றி, பண வரவு.

**மீனம்:**– அதிக செலவு. உறவினர் பகை, மனநிம்மதிக் குறைவு.



காரைநகர் விளானை முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் அழைத்து வரப்படுவதையும், விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய சிறார்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் காணலாம். (படம்: சி.கௌதமன்)

# அமெரிக்காவும், மேற்கு நாடுகளுமே யுத்தக் குற்றங்களை இழைத்துள்ளன

## குற்றஞ் சாட்டுகிறார் விக்கிரமபாகு கருணாரட்ண



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விட அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் யுத்தக குற்றங்களை இழைத்துள்ளதாக விக்கிரமபாகு கருணாரத்தின குற்றம் சாட்டுகின்றார்.

இலங்கையில் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பான விடயத்திலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விட அவர் மேற்கொண்ட யுத்தத்துக்கு ஆலோசனை வழங்கிய அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் இந்தியா போன்ற நாடுகளே பொறுப்புக் கூற வேண்டுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா.நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கை குறித்து கருத்து வெளியிடும் போதே புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை மையமாக வைத்துக் கொண்டு ஏகாதிபத்திய நாடுகள், நாட்டின் தலைவரை யுத்தக் குற்றச்சாட்டுகளுக்குள் சிக்க வைக்க முயற்சிப்பது கண்டனத்திற்குரிய விடயமாகும். இலங்கை போன்ற சிறிய நாடுகளை யுத்த வலைக்குள் வீழ்த்துவதும் அதன் பின் போர்க்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அந்த நாடுகளில் தமது மூக்கை நுழைப்பதும் மேற்கத்தைய நாடுகளின் வழமையாக இருந்து வருகின்றது.

சிங்கள இளைஞர்களின் ஆயுதக்கிளர்ச்சியில் இருந்து நியாயத்தைப் புரிந்து கொண்டு அவர்களின் மனித உரிமைகளுக்காக என்னுடன் உலகம் முழுவதும் சென்று குரல் கொடுத்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ் இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சியின் நியாயத்தைப் புரிந்துகொள்ள முடியாது போனது துரதிஷ்டவசமானதாகும். அதன் காரணமாகவே இன்று மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் சதிவலைக்குள் சிக்குண்டு, தவிக்க நேர்ந்துள்ளது.

ஆயினும் நான் அன்று தொடக்கம் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் சரியான புரிதல்களைக் கொண்டிருப்பதுடன், அது தொடர்பில் தொடாச்சியாக குரல் கொடுத்து வருகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் ஆதரவாளர் பரப்பிய வதந்தியே ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை

## அமைச்சர் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

ஐ.நா நிபுணர் குழுவால் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை இலங்கையின் சுயாதீனத்திற்கு எதிரானதென சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித் துள்ளார்.

மிக நீண்ட காலமாக புலி ஆதரவாளர்கள் பரப்பி வரும் வதந்திகளை ஆதாரமாகக் கொண்டு குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தக் குற்றம் புரிந்ததாகக் கூறி சர்வதேச நீதிமன்றிற்கு இலங்கையை அழைத்துச் செல்வதே ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் ஒரு நோக்கமென அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். இதனால் குறித்த அறிக்கையை தாம் முற்றாகப் புறக்கணிப்பதாக சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

# இந்தியா உட்பட 78 நாடுகளுக்கு விரைவில் ஒன்லைன் விசா வழங்கல்

(கொழும்பு)

இந்தியா உட்பட 78 நாடுகளுக்கு ஒன்லைன் மூலம் விசா வழங்குவதற்கு குடிவரவு - குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (Electronic Travel Authority) பயணத்திற்கான இலத்திரனியல் ஊடக அனுமதி என்ற பெயரில் புதிய திட்டத்தை திணைக்களம் அறிமுகம் செய்துள்ளதாக திணைக்களத்தின் பிரதம கட்டுப்பாட்டாளர் நாயகம் டபிள்யூ.ஏ.சூலானந்த பெரேரா தெரிவித்தார். சுற்றுலாப் பயணியாகவோ அல்லது குறுகிய காலம் இலங்கைக்கு வந்து தங்கியிருக்க விரும்புபவர்களும் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் இணையத்தளம் ஊடாக விசாவுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பத்தை நிரப்பிய பின்னர் செயற்பாட்டுக் கட்டணத்தை ஒன்லைன் ஊடாக செலுத்த வேண்டும்.

அவரது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் விண்ணப்பதாரிக்கு அது குறித்து அறிவிக்கப்படும். விண்ணப்பதாரியின் படிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? விசா வழங்கப்படுமா? என்பதை விண்ணப்பதாரி தெரிந்து கொள்வதற்காக 24 மணி நேரமும் இயங்கும் தொலைபேசி அழைப்புச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


விண்ணப்பதாரிக்குரிய விசா வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஈமெயில் மூலமாக அலலது எஸ்.எம்.எஸ்.மூலமாக குறிப்பிட்ட நபருக்கு அறிவிக்கப்படும். இதில் குறியீட்டு இலக்கமும் அறிவிக்கப்படும்.

விசா கிடைத்தமை குறித்து அறிந்து கொண்ட நபர் தனது கடவுச் சீட்டுடன் இலங்கைக்கு வரும்போது விமான நிலைய வருகைப் பகுதியிலுள்ள குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தில் குறியீட்டு இலக்கத்தை குறிப்பிட்டவுடன் விசா வழங்கப்படும்.

விசாவுக்குரிய கட்டணத்தை விமான நிலையத்திலேயே செலுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. ஒன்லைன் ஊடாக விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்பாக திணைக்களம் 24 மணி நேரத்துக்குள் பரிசீலனை செய்து முடிவை அறிவிக்கும். சாதாரண சேவையின் ஊடாக மூன்று தினங்களிலும் விசாவைப் பெற முடியும். சிங்கப்பூர், மாலைதீவு தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு இவ்வாறு ஒன்லைன் விசா வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதில் அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு அதிகாரபூர்வ பதில் அனுப்புவது பற்றி இலங்கை அரசாங்கம் இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லை என்று இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா கூறியுள்ளார்.

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் நம்பகத்தன்மை பற்றி இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

அடிப்படையற்ற இந்த அறிக்கைக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது பற்றி சட்டநிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஒரு சிறிய பத்திரிகை கூட சரியான தகவல்களின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கிறது. ஆனால் இந்தப் பெரிய அறிக்கை அடிப்படையற்ற தகவல்களை உள்ளடக்கியதாக இருப்பது ஆச்சரியம் தருகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். ஜனாதிபதியின் பதிலைப் பெறும் நோக்கிலேயே அவருக்கு நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாக ஐ.நா பொதுசெயலரின் பணியகம் கூறியிருந்தது.

அதேவேளை, ஐ.நா பொதுச் செயலரின் அறிக்கையை ஆராய்ந்து அதற்குப் பதிலளிக்கும் அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு சட்டமா அதிபர் மெகான் பீரிஸ் தலைமையில் முன்னாள் வெளிவிவகாரச் செயலர்கள் நிகால் றொட் றிகோ, பேனாட் குணதிலக, பாலிக்ககார ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றை இலங்கை அரசாங்கம் நியமித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நிபுணர்குழு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு எதிர்க்கட்சியுடன் இணைந்து கூட்டறிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலாளர் பான்-கீ-மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கூட்டு அறிக்கை வெளியிடுவதன் அவசியம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தி வருவதாக அலரி மாளிகை தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இலங்கையின் கௌரவம மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயம் என்பதைச் சுட்டிக் காட்டி பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்ட பாதுகாப்பு படையினருக்காக அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் இவ்வாறான பொது இணக்கத்தை ஏற்படுத்தும் தேவை இருக்கிறது என பௌத்த பிக்குகள் சிலர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இது சம்பந்தமாக கங்காராம விகாரையின் விகாராதிபதி கலபெட ஞானேஸ்வர தேரரே அதிகமான அழுத்தங்களை கொடுத்து வருகிறார். நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பான எதிர்க்கட்சித் தலைவர் ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்த எண்ணியுள்ளதால் அந்த அறிக்கை குறித்து அவசரமான பதில் அறிக்கைகள் எதனையும் வெளியிட வேண்டாம் என ஜனாதிபதி தனது ஊடகப் பிரிவின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஆதரவைத் திரட்ட அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஆதரவைத் திரட்டுவதற்கு பல்வேறு நாடுகளுக்கும் இலங்கை அரசு தூதுக்குழுக்களை அவசரமாக அனுப்பவுள்ளது.

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கையை அரசாங்கம் பாரதூரமானதாக எடுத்துக் கொண்டுள்ளதாக இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கூறியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, மலேசியா மறறும் ஆபிரிக்கா, லத்தின் அமெரிக்காவில் உள்ள பொதுநலவாய நாடுகளுக்கு தூதுக் குழுககளை அனுப்பி புலிகளைத் தோற்கடிக்க படைபலத்தைப் பயன்படுத்தியது ஏன் என்று விளக்கம் அளித்து, ஐ.நா நிபுணர்கள் குழுவுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றையும் அரசாங்கம் தயாரித்து வெளியிடவுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புலிகளால் பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உயிரிழப்புகள், தீவிரவாதம் அழிக்கப்பட்டதால் வடக்கு, தெற்கு மக்கள் அடைந்துள்ள பயன்கள், இறுதிக் கட்டப்போரின் போது எடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள், குறிப்பாக வன்னி, முல்லைதீவு பகுதிகளின் நிலைமைகள் குறித்து இந்த வெள்ளை அறிக்கையில் விபரிக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஐ.நா பொதுச்செயலரின் அறிக்கையை ஆராய்ந்து அதற்கு எதிரான அறிக்கை ஒன்றை தயார் செய்யும்படி இலங்கையின் சட்டமா அதிபரை அரசாங்கம் கேட்டுள்ளது.

சட்டமாஅதிபருக்கு உதவுமாறு ஓய்வுபெற்ற வெளிவிவகாரச் செயலர்களான நிகால் றொட்றிகோ, பேனாட் குணதிலக, பாலிக்ககார ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 85 தொல்பொருள் இடங்கள் கண்டுபிடிப்பு


(கொழும்பு)

யுத்தம் முடிவுற்ற பின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் புதிதாக தொல்பொருள் முக்கியத்துவமிக்க 85 இடங்கள் இனம் காணப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு முழுமைக்கும் பௌத்த கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களை புலிகள் அழித்து விட்டதாகக் குற்றம் சாட்டியுள்ள அவர், எஞ்சியுள்ள சிற்சில தடயங்களைக் கொண்டே தொல்பொருள் முக்கியத்துவ மிக்க இடங்களைக் கண்டறிய வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவ்வாறு இனம் காணப்பட்டுள்ள பல இடங்கள் இது வரை எந்தவொரு தொல்பொருளியலாளரும் கண்டுபிடிக்காத, பௌத்த மத தலைவர்கள் கேட்டறியாத இடங்களாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைக்கு புதிதாக இனம் காணப்பட்டுள்ள தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்துடன் இணைந்து பல செயற்திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தனபாலன் வெற்றிக் கிண்ணத்தை வெற்றி கொண்டது கொக்குவில் இந்து




(யாழ்ப்பாணம்)

சென்.ஜோன்ஸ் கல்லூரியும், யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நான்காவது வருடமாக நடத்தும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் சிவசம்பு தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தினை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கைப்பற்றியது.

6 பேரைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட 5 ஓவர்களைக் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணியும கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி வீரர்கள் எவரும் குறிப்பிடும்படியாகத் துடுப்பெடுத்தாடவில்லை.


பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக ராகுலன் 2 விக்கெட்டினைக் கைபற்றினார்.

53 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 4.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ராகுலன் 19 ஓட்டங்களையும், திலோஜன் 26 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மி, 20)

# மோசமான களத்தடுப்பே தோல்விக்குக் காரணம்

(சென்னை)



சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர் மைக் ஹசி கொடுத்த 3 பிடிகளை நழுவவிட்டதே தங்கள் அணியின் தோல்விக்குக் காரணம் என்று பெங்களூர் கப்டன் டானியல் வெட்டோரி கூறினார்.

தொடர்ச்சியாக 3ஆவது தோல்வியைச் சந்தித்த பிறகு அவர் கூறுகையில்-

களத்தடுப்பில் செய்த தவறுக்கான பலனை அனுபவித்து இருக்கிறோம். ஹசியை (8ஓட்டங்களில்) தொடக்கத்திலேயே வெளியேற்றும் வாய்ப்பை நழுவ விட்டோம். அதுதான் தோல்விக்குக் காரணம்.

அதன் பிறகும் அவரின் இரு பிடிகளைக் கோட்டை விட்டோம். இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி அவர் நிறைய ஓட்டங்களைக் குவித்து விட்டார். இதன் மூலம் சென்னை அணியும் மிகப்பெரிய இலக்கை எட்டிவிட்டது. நாங்கள் சிறப்பாக களத்தடுப்புச் செய்திருந்தால் வெற்றி பெற நல்ல வாய்ப்பு இருந்திருக்கும்.

இநதத் தொடரில் களத்தடுப்பு மட்டும் தான் எங்களது மிகப் பெரிய பலவீனமாக இருந்து வருகிறது. அதைச் சரி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

வெற்றி கண்ட சென்னை அணியின் கப்டன் டோனி கூறுகையில்,

எங்களது தொடக்கம் சிறப்பாக இருந்தது. நான் துடுப்பெடுத்தாடியபோது, மற்ற ஆடுகளங்களை விட, இந்த ஆடுகளம் கொஞ்சம் கடினமாக இருப்பதாக உணர்ந்தேன். ஹசி மிகவும் அருமையாக ஆடினார். மற்ற ஆட்டக்காரர்களும் தங்களது சிறந்த பங்களிப்பை அளித்தனர். பந்து வீச்சும் சிறப்பாக இருந்தது என்றார்.





# டில்லி டேர்டெவில்ஸ் அணிக்காக முழுமையாகப் பங்கேற்பேன்

(மும்பை)

ஐ.பி.எல். தொடரில், டில்லி டேர்டெவில்ஸ் அணிக்காக முழுமையாகப் பங்கேற்பேன் என, அவுஸ்ரேலிய சகலதுறை வீரர் ஜேம்ஸ் ஹோப்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று ஐ.பி.எல். தொடர்களில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடிய, அவுஸ்ரேலிய சகலதுறை வீரர் ஜேம்ஸ் ஹோப்ஸ் இம்முறை டில்லி டேர்டெவில்ஸ் அணியில் இடம் பிடித்துள்ளார். சமீபத்தில் இவரது தந்தை, புற்று (குடல்) நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை மேற்கொண்டு வருகிறார். இதனால் ஜேம்ஸ் ஹோப்ஸ், பாதியில் நாடு திரும்பலாம் என எதிர்பார்க்கப் பட்டது.

இதுகுறித்து ஜேம்ஸ் ஹோப்ஸ் கூறியதாவது: எனது தந்தையின் உத்தரவின்படி நான்காவது ஐ.பி.எல். தொடரில் முழுமையாகப் பங்கேற்பேன். சமீபத்தில் எனது தந்தை, குடல் பகுதியில் ஏற்பட்டுள்ள புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இருப்பினும், இது ஆரம்ப கட்டம் என்பதால் அதிகம் கவலைப்படத் தேவையில்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது அவருடன், எனது தாய் மற்றும் சகோதரர் ஜோன் ஆகியோர் உதவிக்கு உள்ளனர்.



எனது தந்தையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, ஐ.பி.எல். தொடரில் டில்லி அணிக்காக முழுமையாகப் பங்கேற்க வேண்டும். பாதியில் நாடு திரும்பினால், உன்னைக் கொன்று விடுவேன் என வேடிக்கையாகக் கூறினார். எனவே ஐ.பி.எல். தொடரில் முழுமையாக விளையாடுவேன.

முதல் இரண்டு போட்டியில் எங்கள் டில்லி அணி தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கிறது. இருப்பினும் இதுகுறித்து கவலைப்படத் தேவையில்லை. இன்னும் நிறையப் போட்டிகள் இருப்பதால் விரைவில் எழுச்சி கண்டு வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இந்திய மண்ணில் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்பது மகிழ்ச்சி அளிக்கிறது. தொடர்ந்து நிறையப் போட்டிகளில் விளையாடுவதால், எவ்வித சலிப்பும் இல்லை என்று ஜேம்ஸ் ஹோப்ஸ் கூறினார்.

# இந்திய அணியில் இடம்பெற ஐ.பி.எல். போட்டி அடித்தளம்

(புதுடில்லி)

இளம் வீரர்கள் இந்திய அணியில் இடம் பிடிப்பதற்கு ஐ.பி.எல் போட்டியே உதவுகிறது என்று டெல்லி டேர் டெவில்ஸ் வீரர் உமே யாதவ் கூறினார்.

ஐ.பி.எல் போட்டி எனக்கும் என்னைப் போன்ற மற்ற இளம் வீரர்களுக்கும் மிகச்சிறந்த அடித்தளமாக உள்ளது. இதன் மூலம் ஏராளமான வேகப்பந்து வீச்சாளர்கள் இந்திய அணியில் இடம்பிடிக்கப் போட்டிபோடுகின்றனர். கடந்த ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற இருபது ஓவர் போட்டியில் பிரவீண் குமார் காயம் காரணமாக விலகியதால் இந்திய அணியில் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதேபோல் ஜிம்பாப்வே, தென்னாபிரிக்காவில் சென்று விளையாடுவதற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இவை எல்லாமே ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடியதாலேயே எனக்குக் கிடைத்தது. எனவே எனக்கு ஐ.பி.எல் போட்டி நல்ல வாய்ப்பு.

இந்திய அணியின் தென்னாபிரிக்காவுக்கான சுற்றுப் பயணத்தின்போது சகீர்கானிடம் இருந்து பந்துவீச்சு நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன். அவர் பந்துவீச்சு குறித்து நிறைய விடயங்களை என்னிடம் பகிர்ந்து கொண்டார். அவர் எனக்கு உதவியுள்ளார். இதேபோல் மூத்த வீரர்களும் நிறைய ஆலோசனைகளை வழங்கினர். இப்போது நான் கிரிக்கெட் பற்றிய நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டேன் என்றார்.

# ஐ.பி.எல். விவகாரம் விரைவில் தீர்க்கப்படும்

(கொழும்பு)

இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இலங்கை கிரிக்கட் அணியின் வீரர்கள் தொடர்பில் நிலவுகின்ற சிக்கல்கள் எதிர்வரும் தினங்களில் தீர்த்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து சுற்றுத் தொடருக்கான பயிற்சிகளில் கலந்து கொள்வதற்காக, இலங்கை வீரர்கள் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்ப வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பயிற்சிகளுக்காக இலங்கைக்கு மீண்டும் திரும்பத் தயாராக இருப்பதாக இலங்கை அணியின் தலைவர் குமார்சங்கக்கார, இந்திய ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை வரும் திகதி குறித்து, இந்திய மற்றும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகளுடன் பேசித் தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர், விளையாட்டுத்துறை அமைச்சருடன் அடுத்த வாரம் முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் சிவசம்பு தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 6பேரைக் கொண்ட 5 ஓவர் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கொக்குவில் இந்து, இரண்டாம் இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பாடசாலை முதல்வர்கள் மற்றும் வீரர்களைக் காணலாம். (படம் :சுரேஸ்)

# எகிப்து முன்னாள் ஜனாதிபதியின் தேசிய ஜனநாயகக் கட்சி கலைப்பு

(கெய்ரோ)

எகிப்தில் அதிபராக இருந்த ஹொஸ்னி முபாரக்கிற்கு எதிராகப் போராட்டம் நடத்தி அவரை பதவியில் இருந்து மக்கள் விரட்டியடித்தனர். தற்போது இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டுள்ள அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ளார்.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது. அவர் ஜனாதிபதியாக இருந்த போது தேசிய ஜனநாயக கட்சி என்ற பெயரில் ஒரு கட்சியை நடத்தி வந்தார். அக்கட்சியின் தலைவராகவும் முபாரக் பதவி வகித்து வந்தார்.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின் போதெல்லாம் இக்கட்சியே தொடர்ந்து அமோக வெற்றி பெற்று வந்தது. ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியுள்ள நிலையில் அவரது தேசிய ஜனநாயகக் கட்சி நேற்று முன்தினம் கலைக்கப்பட்டது.

அதற்கான உத்தரவை உயர் மட்ட நிர்வாக நீதிமன்றம் பிறப்பித்தது.

இக்கட்சிக்கு எகிப்து முழுவதும் பல கோடி மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் ரொக்கப் பணம் உள்ளது. அவற்றையும் பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையை இராணுவ அரசு மேற்கொண்டது. அக்கட்சி கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு ஜனாதிபதியாக இருந்த அன்வர் சதாத் என்பவரால் தொடங்கப்பட்டது. அவரிடம் இருந்து முபாரக் கட்சியைக் கைப்பற்றினார்.

மக்கள் புரட்சியால் முபாரக் பதவி விலகியதைத் தொடர்ந்து அக்கட்சியின் தலைவராக அன்வர் சதாத்தின் மைத்துனர் தலாத



சதாத் பொறுப்பு ஏற்று இருந்தார். எங்களது கட்சி கலைக்கப்பட்டது பற்றி வருத்தப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலின போது மீண்டும் புதிய தேசிய ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சியைத் தொடங்குவோம்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோம் என அவர் அறிவித்துள்ளார்.




# இஸ்லாமியர்களுக்கு என தனியான இணையத்தளம்

(தெஹ்ரான்)

உலகம் முழுவதும் வசித்து வரும் இஸ்லாமியர்களுக்கு எனத் தனியான இணையத்தளம் விரைவில் உருவாக்கப்படும் என ஈரான் அறிவித்துள்ளது.

தற்போது வேர்ல்டு வைட் வெப் என்று அழைக்கப்படும் இணையத்தளம் மூலம் அனைத்து மக்களும் அனைத்துத் தகவல்களும் உடனுக்குடன் கிடைத்து வருகிறது.

இந்த இணையத்தளத்தில் அமெரிக்கா முக்கியமான பங்கை வகிக்கிறது.

பெரும்பாலான இணையங்கள் அமெரிக்காவை மையமாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இணையத்தளத்தில் அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஈரான் அரசு இஸ்லாமிய மக்களுக்கு என தனியான இணையத்தளத்தை உருவாக்க உள்ளது.

இந்த இணையத்தளத்தில் இஸ்லாமின் கொள்கைகள், சர்வதேச தகவல் பரிமாற்றத்திற்காக பார்ஸி மொழியை மேம்படுத்துவது போன்றவை உட்படப் பல்வேறு தகவல்கள் இடம்பெறும் வகையில் உருவாக்கப்படவுள்ளது என ஈரான் அரசின் பொருளாதார பிரிவைச் சேர்ந்த அலி அக்வ மொகம்மதி தெரிவித்துள்ளார்.

# திபெத் துறவிகள் மடத்தில் இயல்புநிலை ஏற்பட சீனாவிற்கு, சர்வதேசம் அறிவுறுத்த வேண்டும்

## தலாய்லாமா கோரிக்கை

(தர்மசாலா)

சர்ச்சைக்குள்ளான திபெத் நகாபா துறவிகள் மடத்தில் இயல்பு நிலை திரும்புவதற்கு சீனாவை சர்வதேச நாடுகள் அறிவுறுத்த வேண்டும் எனத் தலாய்லாமா நேற்று முன்தினம் கேட்டுக் கொண்டுள்ளார்.


கடந்த மாதம் திபெத்தில் உள்ள நகாபா கீர்த்தி புத்த துறவிகள் மடத்தில் இளம் துறவி ஒருவர் தீக்குளித்து உயிரிழந்தார். நகாபா பகுதியில் மூன்றாண்டுகளுக்கு முன்பு திபெத்தியர்களுக்கு எதிராக நடந்த சீன அடக்குமுறையின் நினைவு நாளன்று அவர் தீக்குளித்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, சீன அரசு அத்துறவி மடம் அமைந்துள்ள பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலமாக தேச பக்திப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறது.

ஆயினும், சீன இராணுவம் இந்த மடத்தை முற்றுகையிட்டுள்ளது என இந்தியாவிலுள்ள திபெத்தியர்கள் கூறி வருகின்றனர். துறவிகள் மடத்தைவிட்டு வெளியே வர அனுமதிக்கப்படுவதில்லை என்றும், அவர்களுடைய மத வழிபாடுகளை நடத்த முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. வெளியேயிருந்து மடத்துக்குள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. உள்ளே உணவுகூட கொண்டு போக முடியாததால், மடத்திலிருப்பவர்கள் விரைவில் உணவில்லாமல் அவதிப்பட நேரிடும் எனக் கூறப்படுகிறது.

33 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 11 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் காவலில் உள்ள 22 பேரில் 8 பேர் துறவிகளாவர். இந்நிலையில் இது குறித்து நேற்றுமுன்தினம் தலாய் லாமா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பது:

கீர்த்தி மடத்தில் நிலைமை மிக மோசமாக உள்ளது. உள்ளூர் மக்களுக்கும் சீன இராணுவத்துக்கும் இடையே எப்போது வேண்டுமானாலும் மோதல ஏற்படலாம். இதன் விளைவால் அங்குள்ள அனைத்து திபெத்தியர்களும் பாதிப்பு அடையக்



கூடும். மடத்திலுள்ள துறவிகளும், திபெத்திய மக்களும் அமைதி காக்க வேண்டும். ஏதேனும் அசம்பாவிதமாக நடந்தால் அதையே காரணமாக்கி, சீன இராணுவம் கடும் அடக்குமுறையில் ஈடுபடக் கூடும்.

சர்வதேச அரசுகள், தொண்டு நிறுவனங்கள் முதலானோர் சீன அரசிடம் பொறுமை காக்குமாறும் அடக்குமுறையைக் கைவிடுமாறும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இராணுவ முற்றுகையை அகற்றுமாறு சீனாவை வற்புறுத்த வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

1472ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நகாபா கீர்த்தி மடத்தில் இப்போது 2,500 துறவிகள் உள்ளனர்.

# முன்னோரின் அறிவுரை கேட்காததால் ஐப்பானுக்கு வந்த பெருந் துயரம்



(மியாகோ)

இன்றைய யகத்தில், விஞ்ஞான வளர்ச்சியை நாம் பெருமளவில் நம்பினாலும், முன்னோர் அறிவுரைக்கும் முக்கியத்துவம் தர வேண்டும். இல்லையெனில், நமக்கு பேரிழப்புகள் ஏற்படக் கூடும் என்பதற்கு சமீபத்திய உதாரணம் ஜப்பான்.

உலகில் முதியவர்கள் அதிகம் உள்ள நாடு ஜப்பான். இங்கு, சமீபத்தில் ஏற்பட்ட நில நடுக்கம், சுனாமி ஆகியவற்றால், நாட்டின் வடகிழக்குப் பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதுவரை 12 ஆயிரத்து 500 பேர் இறந்துள்ளனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக மாறியுள்ளனர். நாட்டின் வடகிழக்கில் உள்ளது மியாகோ நகரம். இதைச் சுற்றியுள்ள கடலோரப் பகுதிகளில், பல நூற்றாண்டுகளாக, சுனாமித் தாக்குதல் ஏற்படுவது வழக்கம்.

இது குறித்து எதிர்கால மக்களை எச்சரிக்கும் நோக்கில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, அங்குள்ள அனேயாசி கடற்கரையில் கல்வெட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. அதன்படி நடக்காதது எவ்வளவு பெரிய தவறு என அப்பகுதி மக்கள் தற்போது சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். பல்வேறு உயரங்களில், வடிவங்களில் இருக்கும் இந்தக் கல்வெட்டுகளில், இங்கு சுனாமி பாதிப்பு உண்டு. நிலநடுக்கம் வந்தால், சுனாமியும் வரும். எச்சரிக்கையாக இரு என்றும், உயர்ந்த பகுதியில் வசிப்பதே அமைதியான வாழ்வுக்கு உகந்தது, கல்வெட்டு அமைந்துள்ள இடத்தைத் தாண்டி குடியிருப்பை ஏற்படுத்தினால் பேராபத்து நேரிடும் என்றும் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

அதுபோல், எந்தெந்தப் பகுதியில் சுனாமி தாக்கக் கூடும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், எந்தப் பகுதியில் வசித்தால் பாதுகாப்பாக இருக்கலாம் என்பது பற்றிக் குறிப்பிடவில்லை.

இதுகுறித்து அப்பகுதியை சேர்ந்த, 12 வயதுச் சிறுவன் யூது கிம்யூரா கூறுகையில், இந்தக் கல்வெட்டுகள் பற்றி நாங்கள் பாடங்களில் படித்துள்ளோம். இவை 600 ஆண்டுகள் பழமையானவை. எங்கள் பகுதிச சிறுவர்கள் அனைவருக்கும் இது பற்றித் தெரியும் என்றான். அதே பகுதியில் வசிக்கும் ஐசாமு என்பவர் கூறும்போது, கடந்த 1896ஆம் ஆண்டு, பெரும் சுனாமி தாக்கியதைத் தொடர்ந்து, எங்கள் முன்னோர், மேட்டுப் பகுதியில் குடியேறினர். நாங்களும் அவர்கள் வழியையே பின்பற்றுகிறோம். என்றாலும், கல்வெட்டில் கூறியுள்ளதையும் மீறி, இங்குள்ள சிகெய் கடற்பகுதியில் ஏராளமான பாடசாலை மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் நிறுவப்பட்டன. அனைத்தும் தற்போது தரைமட்டமாகி, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தான் மிச்சம். கல்வெட்டு வாசகங்கள் குறித்து யாரும் கவலைப்படுவதில்லை. இன்னும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் மீண்டும் புதுப்புதுக் கட்டடங்கள் இப்பகுதியில் நிறுவப்படும் என்றார்.

# ஜப்பானில் தொடர்கின்றது நிலநடுக்கம் நியூஸிலாந்து, அவுஸ்ரேலியாவும் குலுங்கின



(டோக்கியோ)

கடந்த மாதம் 11 ஆம் திகதி ஜப்பானில் சக்தி வாய்ந்த பூகம்பம ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சுனாமி ஏற்பட்டது.

இச்சம்பவத்தில் 28 ஆயிரம் பேர் உயிர் இழந்தனர். புகுஷிமாவில் உள்ள அணுமின் நிலையத்தின் அணு உலைகள் வெடித்துச் சிதறி, கதிர்வீச்சை வெளிப்படுத்தி வருகின்றன. அவற்றைச் சீரமைக்கும் பணி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ஜப்பானில் தொடர்ந்து அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் அங்கு மண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. காண்டோ மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் காலை 11.19 மணியளவில் இது ஏற்பட்டது. இதனால், அங்கு வீடுகள் மற்றும் கட்டிடங்கள் குலுங்கின.

இதைத்தொடர்ந்து அதிர்ச்சி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஓட்டம் பிடித்தனர்.

இதற்கிடையே, 5.9 ரிக்டர் அளவில் நில நடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. தெற்கு இப்ராகி பகுதியில் பூமிக்கு அடியில் 79 கி.மீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டதாக ஜப்பானின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

கடந்த 11ஆம் திகதி பூகம்பத்தின்போது புகுஷிமாவின் அணு உலைகள் வெடித்து, கதிர்வீச்சுப் பாதிப்பை ஏற்படுத்தின.

அதுபோன்று தற்போது நடைபெறாமல் தடுக்க ஜப்பானில் உள்ள 13 அணு உலைகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

ஜப்பானில் பூகம்பத்தைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலும் நில நடுக்கம் ஏற்பட்டது. அங்கு வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. பீதி அடைந்த மக்கள் வீதிகளில் ஓட்டம் பிடித்தனர்.

# நான்காவது மீனவரும் சடலமாக மீட்பு

(அறந்தாங்கி)

ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றவேளை காணாமற்போன நான்காவது மீனவரின் சடலமும் தலை வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

தலையில்லாத நிலையில் மீட்கப்பட்ட மீனவர் மாரிமுத்து என அடையாளம் காணப்பட்டார்.

புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கடற் பகுதியிலிருந்தே குறித்த மீனவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் தலை இல்லாத நிலையில் மிகவும் உருக்குலைந்து அழுகிய நிலையில் இருந்ததனால் மணல்குடி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு சம்பவ இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுத்து வரும் பா.ஜனதா மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான சுஷ்மா சுவராஜ்,



இந்த விவகாரம் குறித்து வெளி யுறவு துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்தத் தகவலை நிருபர்களிடம் தெரிவித்த சுஷ்மா, தமிழக மீனவர்கள் 4 பேரும் கொல்லப்பட்டது குறித்து உண்மை நிலவரத்தை அறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக எஸ்.எம். கிருஷ்ணா உறுதி அளித்ததாகக் கூறினார்.

# பெண்களின் பிறப்பு வீதம் குறைகிறது இந்தியாவில்

(வொஷிங்டன்)

இந்தியாவில் ஆண், பெண் இடையிலான பிறப்பு விகிதம் பெரிய அளவில் குறைந்து வருவதால், 2030 இல் இருபாலருக்கும் இடையிலான வித்தியாசம் 20 சதவீதமாக இருக்கும் என்று புதிய ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது. இந்தியாவில் பஞ்சாப், டில்லி, குஜராத் ஆகிய வடக்கு மாநிலங்களில் ஆண், பெண் பாரபட்சம் அதிகளவில் காணப்படுகிறது. தென் மாநிலங்களில் இந்த வித்தியாசம் குறைந்து காணப்படுகிறது.

கருவில் இருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதைத் தெரிந்து கொள்ள பல்வேறு மருத்துவ தொழில்நுட்பங்கள் வந்து விட்டதால், ஆண் குழந்தை வேண்டுவோர் எளிதில் பெண் கருவை கலைத்துவிட வழி வகுக்கிறது. இந்தக் காரணத்தால், 2030 இல் இந்தியாவில் பெண் குழந்தைகளை விட ஆணகள் 20 சதவீதம் அதிகமாக இருப்பார்கள் என்று லண்டனின் சர்வதேச சுகாதார மற்றும் வளர்ச்சிக்கான யு.சி.எல் மையம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதேபோல் சீனா, தென்கொரியா ஆகிய நாடுகளிலும் 100 பெண் குழந்தைகளுக்கு 105 ஆண் குழந்தைகள் என்ற வீதத்தில் பிறக்கின்றனர். இதுகுறித்து இம் மைய ஆய்வாளர் தெரசா ஹெஸ்கெத் கூறுகையில், முதலில் பிறக்கும் குழந்தையை பொறுத்து, இரண்டாவது குழந்தையைத் தேர்வு செய்கின்றனர். குழந்தை பெற்றுக் கொள்வதில் பாரபட்சம் காட்டப்படுவதால், சமூகத்தில் ஆண்கள் திருமணம் செய்ய தேவையான பெண்கள் கிடைக்காமல் பற்றாக்குறை நிலவும் என்றார்.

# இந்தியா, கஜகஸ்தான் இடையே அணுசக்தி ஒப்பந்தம் கைச்சாத்து



(சென்னை)

கஜகஸ்தான் நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன்சிங் முன்னிலையில் அந்த நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது. இதனால், அந்த நாட்டிலிருந்து 2100 தொன் யுரேனியம் இந்தியாவுக்குக் கிடைக்கும்.

இந்தியாவில் அணுமின் சக்தி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், கனடா, ஆர்ஜென்ரீனா, மங்கோலியா உள்ளிட்ட நாடுகளுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை இந்தியா செய்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், சீனாவில் ஹபிரிக்ஸ் நாடுகள் மாநாட்டில் பங்கேற்கச் சென்ற பிரதமர் மன்மோகன்சிங், கஜகஸ்தான் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டார்.

அங்கு இரண்டு நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவர், அந்த நாட்டு அதிபர் நுர்சுல் தான் நாஜர் பாயேவ் உடன் நேற்று முன்தினம் காலையில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அந்தப் பேச்சுவார்த்தையின் இறுதியில், இந்தியா-கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி, இந்தியாவின் அணுமின் உற்பத்திக்கு கஜகஸ்தான் நாடு முழு அளவில் ஒத்துழைப்பு அளிக்கும். உலகிலேயே யுரேனியம் அதிகளவில் உள்ள நாடாக கஜகஸ்தான் இருக்கிறது.

கஜகஸ்தான் நாட்டில் இருந்து இந்தியாவுக்கு 2100 தொன் யுரேனியம் விநியோகம் செய்யப்போவதாகவும் தேவைபட்டால் கூடுதலாக வழங்க தயாராக இருப்பதாகவும் அதிபர் நுர்சுல்தான் இதன்போது அறிவித்தார். ஏற்கனவே, கடந்த 2009 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு நுர்சுல்தான் வந்திருந்த போது கஜகஸ்தான் அணு உற்பத்தி நிறுவனம் மற்றும் இந்திய அணுசக்தி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானமை குறிப்பிடத்தக்கது.

# வயிற்று வலிக்கு சிகிச்சை பெறச் சென்றவேளை பெண்களின் கர்ப்பப்பை அகற்றப்பட்டது

## ராஜஸ்தான் மாநிலத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

(சென்னை)

சாதாரண வயிற்று வலிக்காக சிகிச்சைக்கு வந்த 226 பெண்களின் கர்ப்பப்பையை அகற்றி அறுவைச் சிகிச்சை செய்த 3 மருத்துவமனைகளின் அங்கீகாரத்தை ராஜஸ்தான் அரசு ரத்து செய்தது.

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள சில மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் செல்லும் பெண்களுக்கு தேவையே இல்லாமல் அறுவைச் சிகிச்சை செய்து கர்ப்பப் பையை அகற்றுவதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக, தன்னார்வத் தொண்டு நிறுவனம் சார்பாக புகார் அளிக்கப்பட்டது.

அந்தப் புகாரில் பண்டிகுய் நகரில் உள்ள மருத்துவமனைகளில் அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு இந்த அவலம் நடைபெறுவதாகக் கூறப்பட்டது.

கடந்த ஆண்டு மார்ச் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான கால கட்டத்தில் சிகிச்சைக்கு சென்ற 385 பெண்களில் 226 பெண்களுக்கு கர்ப்பப்பை அகற்றப்பட்டு இருக்கிறது.

இந்தத் தகவல்களை அரசின் கவனத்துக்குக் தொண்டு நிறுவனத்தின் பொதுச் செயலாளர் துர்கா பிரசாத் கொண்டு சென்றார்.

எனவே, ராஜஸ்தான் மாநில அரசு அதிரடி நடவடிக்கையை எடுத்தது. புகாருக்கு உள்ளான 5 மருத்துவமனைகளில் சோதனை நடத்தி நோயாளிகள் பற்றிய ஆவணங்களை கைப்பற்றியது.

# பியர் போத்தல்களின் மூடிகளைத் திறந்து பெங்களூர் இளைஞர் கின்னஸ் சாதனை

(பெங்களூர்)

ஒரு நிமிடத்தில், 63 பியர் போத்தல்களின் மூடியைத் திறந்து, இந்திய இளைஞர் ஒருவர் புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

பெங்களூரைச் சேர்ந்தவர் கிரிஷ்குமார். இவர், இத்தாலியில் நடந்த கின்னஸ் போட்டியில் கலந்துகொண்டு, ஒரு நிமிடத்தில் 63 பியர் போத்தல்களின் மூடியை திறந்து, புதிய உலக சாதனை படைத் துள்ளார்.

இதன்மூலம், தனது பழைய சாதனையை முறியடித்து, கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் மீண்டும் இடம்பிடித்தார்.

இதற்கு முன், 2009 ஆம் ஆண்டில், ஒரு நிமிடத்தில் 6Γ பியர் போத்தல்களின் மூடியைத் திறந்து சாதனை படைத்தார். அவரது சாதனையைப் பாராடடி, கின்னஸ் அமைப்பு சார்பில் அவருக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து கிரிஷ் கூறும் போது, இந்தப் பிரிவில், அமெரிக்கர் ஒருவர் தொடர்ந்து, 10 ஆண்டுகள் சாதித்து வந்தார். அதை முறியடிக்கும் நோக்கிலேயே, இந்தப் பிரிவில் போட்டியிட்டு வருகிறேன்.

எனது பயிற்சிக்கு உதவிய, எனது பெற்றோர், நண்பர்கள் மற்றும் பயிற்சியாளர் ஆகியோருக்கு நன்றி. பணம் சம்பாதிக்கும் நோக்கில், நான் இவ்வாறு செய்யவில்லை. என்னால் முடிந்த அளவு, இந்திய நாட்டுக்கு பெருமை சேர்கவே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளேன் எனத் தெரிவித்தார்.

# சீமானின் ஆசையை நிறைவேற்ற முயற்சி செய்கின்றார் தங்கபாலு

## சொல்கிறார் எஸ்.வி.சேகர்



(கும்பகோணம்)

சீமானின் ஆசையை நிறைவேற்ற தங்கபாலு முயற்சிக்கிறார் என மயிலாப்பூர் சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினரும், திரைப்பட நடிகருமான எஸ்.வி. சேகர் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் செய்தியாளர்களுக்கு அவர் அளிதத பேட்டியில் தெரிவித்ததாவது -

மக்களிடம் அதிக விழிப்புணர்வை உண்டாக்கி, பெரும்பாலானோரை வாக்களிக்கச் செய்த தேர்தல் ஆணையத்தைப் பாராட்டவேண்டும். இத் தேர்தலில் தி.மு.க கூட்டணி வெற்றிபெற்று மீண்டும் 6 ஆவது முறையாக கருணாநிதி முதல்வராகப் பதவியேற்பார்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து முதலில் நீக்கப்பட வேண்டியவர் தங்கபாலுவே. மயிலாபபூர் தொகுதியில் கொல்லைப்புற வழியாக வந்து வேட்பாளராகப் போட்டியிட்டார்.

அவருக்கு கட்டுப்பணம் கூடக் கிடைக்காது என்ற பயத்தில் தான் காங்கிரஸ் நிர்வாகிகளை நீக்குவதாக அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் பல கோஷடிகளாக காங்கிரஸ் செயற படுகின்றனர் என்ற கருத்து நிலவிவரும் நிலையில், தங்கபாலு எங்களை நீக்கியதன் மூலம், அனைத்துக் கோஷ்டியினரும் ஒற்றுமையாகச் செயறபடச் செய்ததற்கு நன்றி தெரிவிக்கவேண்டும்.




தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 63 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க முயற்சிப்பேன் என்று சீமான் கூறினார். அவரது ஆசையை நிறைவேற்ற தங்கபாலு தற்போது முயற்சிக்கிறார்.

நடிகர் ரஜினிகாந்த் இரு தவறுகளை செய்து விட்டார். அனைவரையும் வைத்துக் கொண்டு வாக்குப் பதிவு செய்தது, வாக்குப்பதிவு செய்தவுடன் மாற்றம் தேவை என மகள் முடிவு எடுத்துள்ளதாகக் கருத்துத் தெரிவித்தது.

தேர்தலுக்கு முன்தாகவோ அல்லது தேர்தல் முடிவு வந்த பிறகோ இந்தக் கருத்தை அவர் தெரிவித்திருக்கலாம் என்றார்.

# அங்கத்துவ நாட்டை பாதுகாக்கத்தவறினால் சீனா, ரஷ்யாவிடம் பாதுகாப்பைத் தேட நேரிடும்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய எச்சரிக்கை



ஐ.நா தனது அங்கத்துவ நாடு ஒன்றைப் பாதுகாக்க முன்வராது போனால், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் பாதுகாப்பை நாட இலங்கை நிர்ப்பந்திக்கப்படும் என்று கூறியுள்ளார் இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.

சில நாடுகளால் ஐ.நா கடத்தப்பட்டு விட்டதாகவே தோன்றுகிறது.

இலங்கை ஐ.நாவின் உறுப்பு நாடு. அதற்கு ஐ.நா பாதுகாப்பு அளிக்க வேணடும். இந்தஅறிக்கையானது ஏனைய நாடுகளிடம் பாதுகாப்புக் கோர எம்மை நிர்ப்பந்திக்கிறது.

சில நாடுகளால் ஐ.நா அடமானம் வைக்கப்படக் கூடாது. நிபுணர்கள் குழுவின் இந்த அறிக்கைக்குப் பின்னால் அவர்களுக்கு ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்துள்ளது. புலிகளால் நிபுணர்கள் குழு சலவை செய்யப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த தீவிரவாத அமைப்பே புலிகள் என்பதை அவர்கள் கூறத் தவறி விட்டனர்.

தரையில் போரிடும் படையினரைத் தவிர, கடல் மற்றும் வான் பிரிவுகளையும் புலிகள் கொண்டிருந்தனர்.

அவர்கள் தென்பகுதிக்கு தற்கொலைக் குண்டுதாரிகளை அனுப்பி அரசியல்வாதிகளையும், பொதுமக்கள் பயணம் செய்யும் பேருந்துகள், கட்டடங்களை இலக்கு வைத்தும் தாக்குதல்களை நடத்தினர்.

இராணுவ முகாம்களை அழித்து ஒரே இரவில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றனர். காவல்துறையினரைக் கொண்டு அடக்குவதற்கு அவர்கள் ஒரு அமைப்பு அல்ல.

மோசமான எதிரிகளான புலிகளுடன் எம்மால் போரிட முடியாது என்று ஐ.நா, அமெரிக்கா, நோர்வே மற்றும் பல நாடுகள் எம்மிடம் கூறின.

நாம் எமது படைகளை அனுப்பி, உச்சமான சூட்டுவலுவைப் பயன்படுத்தி அவர்களை அடக்கினோம்.

உலக உணவுத் திட்டம் போன்ற ஐ.நா. வின் முகவர்களினதும், அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவினதும் அறிக்கைகளை நிபுணர்கள் குழு புறக்கணித்திருப்பதாகவே தோன்றுகிறது.

போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளிடம் சிக்கிப் போயிருந்த மக்களுக்கு எவ்வாறு மனிதாபிமான உதவிகள் அனுப்பப்பட்டன என்பது பற்றி அவர்களிடம் கேட்டால் தெரிந்துகொள்ள முடியும்.

அங்கிருந்த மக்களை புலிகள் மனித கேடயங்களாகப் பாவித்தனர். போரின் இறுதிநாட்களில் அவர்களை கடலேரிப் பகுதிக்குத் தள்ளிச் சென்றனர்.

உணவு வாகனத் தொடரணிகள் அவர்களைச் சென்றடைய முடியவில்லை. கடல் வழியான உணவுப்பொருட்களைப் பெற்றுக்கொடுக்க நாம் ஏற்பாடு செய்தோம். புலிகள் கடத்தி விடுவார்கள் என்ற பயத்தில் சிறுவர்களைப் பெற்றோரால் பாடசாலைக்கு அனுப்பமுடியவில்லை.

புலிகளின் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தினால் ஒரே பேருந்தில் பயணிக்க தாய், தந்தையர் பயந்தனர். பள்ளிவாசல்களில் தொழுகை நடத்தியவர்களும் மாணவபிக்குகளும் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில் தம்மைத் தெரிவு செய்த மக்களை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசாங்கத்துக்கு உளளது. போரின் கடைசி நான்கு ஆண்டுகளிலும் 6,000 படையினர் கொல்லப்பட்டனர். 20,000 பேர் காயமடைந்தனர். அவர்களில் 10,000 பேர் மோசமான காயங்களை அடைந்தனர்.

புலிகளின் உயிரிழப்புகள் மிகவும் அதிகம். ஏனென்றால் படையினர் பயன்படுத்திய சூட்டுவலு அதிகமானது.

சிலர் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான போரின்போது அவர்கள் மரணமாகி விட்டதாகவே கருதவேண்டும்.

ஆனால் அவர்கள் அதைச் சொல்லவில்லை. காணாமற் போனதாகவே சொல்கிறார்கள். போரின் முடிவில் 30,000 புலிகள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள் மீது படையினர் தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நாம் அத்தகைய தாக்குதல்களை நடத்த முன்னர் அந்த மருத்துவமனைகள் இடம்மாற்றப்பட்டு விட்டன. மருத்துவமனைக்கு அருகே புலிகள் தமது பீரங்கிளை நிறுத்தி எம்மீது தாக்குதல் நடத்தினர்.

மருத்துவர்களும், நோயாளிகளும் அங்கிருந்து வெளியேறிய பின்னரே நாம் பதில் தாக்குதல் நடத்தினோம்.

வானத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசினோம். ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தோம். போர் தவிர்ப்பு வலயங்களை பிரகடனம் செய்தோம்.

அறிவில்லாத ஆய்வுகளை நிபுணர்கள் குழுவின் இந்த அறிக்கை விபரிக்கிறது. அவர்கள் சில மேற்குலக சக்திகளின் தாளத்துக்கு ஏற்பப் பாடியுள்ளனர். என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

## வெட்டுப்புள்ளி வெளியீடு

(கொழும்பு)

பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் இந்த மாத இறுதியில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மீள் திருத்தப் பணிகள் தற்சமயம் இடம்பெற்று வருவதாக அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்தார்.

பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவிடம் இந்தப் பெறுபேறுகள் கையளிக்கப்பட்டதன் பின்னர் வெட்டுப் புள்ளிகளின் விபரங்கள் உரியமுறையில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மே 31 ஆம் திகதிக்குமுன் தேர்தல் நடைபெறும்?

(கொழும்பு)

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட சில உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் பெரும்பாலும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் மே 31 ஆம் திகதிக்குப் பின்னர் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டியுள்ளதால் அதற்கு முன்னர் தேர்தல் நடத்தப்படலாம் எனத் தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் தீர்ப்பு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வழங் கப்படவுள்ளது. இந்த நிலையில் அதன் பின்னர் தேர்தல் நடத்தப்படக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# செல்வி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருதுக்கு மாவட்ட மட்டத்தில் மூவர் தெரிவு



யாழ் மாவட்டத்தில் வினைத்திறனாக செயலாற்றிய கிராம அதிகாரிகள் மூவருக்கு நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா நினைவாக மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலருக்கான 2010 ஆம் ஆண்டுக்கான விருதுக்கு மாவட்ட மட்டத்தில் 15 பிரதேச செயலாளர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து மூன்று கிராம அலுவலர்கள் போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விருதும் சான்றிதழும் விரைவில் வழங்கப்படடவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் 2009 ஆம் ஆண்டில் இருந்து ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது முதல் தடவையாக வழங்கப்பட்டு வருகின்றது.

2010 ஆம் ஆண்டில் 2ஆவது தடவையாக ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருதுக்கு மூன்று கிராம அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதல் மூன்ற இடங்களை பெற்ற கிராம அலுவலர்கள் விபரம் வருமாறு:

1ஆம் இடம்- உடுவில் பிரதேச செயலக கிராம அதிகாரி திரு. இ.எயூஜின் மசனட், 2 ஆம் இடம்- கரவெட்டி பிரதேச செயலக கிராம அதிகாரி திரு. பா.லலித், 3ஆம் இடம்-தெல்லிப்பளை பிரதேச செயலக கிராம அதிகாரி திரு. கே. பூபாலசிங்கம்

மேற்படி விருதுகளை நவாலி ஹேமலதா செல்வராசா சிறுவர் ஞாபகார்த்த நிறுவனம் (HSCBF) வழங்கியுள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

விரைவில் விருது வழங்கும் இடம், காலம் என்பன அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூதாட்டியைக் காணவில்லை

(ஊர்காவற்துறை)

காரைநகர் விளானைச் சேர்ந்த 85 வயது மூதாட்டி ஒருவர் கடந்த வெள்ளிக் கிழமை முதல் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மூதாட்டி சித்த சுவாதீனம் உடையவர் என தெரிவிக்கப்படுவதுடன், இவரை உறவினர்கள் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (14)

## உணவு உற்பத்தியை உறுதிப்படுத்த யூலை முதல் புதிய சட்டத்திருத்தம்



(கொழும்பு)

சிறந்த உணவு உற்பத்தியினை உறுதிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் உணவு குறித்த சட்டங்கள் திருத்தப் படவுள்ளதாக அறிவிக்கபட்டுள்ளது.

இதற்கமைய உணவு உற்பத்தியாளர்கள் சுகாதார அமைச்சின் சட்ட திட்டங்களுக்கு அமையவே தமது உணவு உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி, பொருட்களின் தன்மை குறித்த விபரங்கள் மற்றும் பொருட்களை எடுத்துச் செல்லும் முறைகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்திற்கு ஏற்ற வகையில் இல்லாத காலாவதியான தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகள், குளிர்பானங்கள் என்பன குறித்து சுகாதார அமைச்சு எதிர்வரும் காலங்களில் அதிக கண் காணிப்புக்களை மேற்கொள்ளும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவ்வாறான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

## பதினொரு மாவட்டங்களில் விசேட போஷாக்குத் திட்டம்

(கொழும்பு)

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விசேட திட்டம் ஒன்றைச் சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்களும், குழந்தைகளும் பெரும் நன்மை அடைவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொணனூறு கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டம் 11 மாவட்டங்களில் செயற்படுத்தப்படவுள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்கு குறித்து மாவட்ட ரீதியாக ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் இந்தத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

# ஊரியான் கமக்காரர் அமைப்பு மீது பொதுமக்களின் கண்டனக் கணைகள்

## விவசாயிகளுக்கு விமோசனம் எப்போது?

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி ஊரியான் கிராம கமக்கார அமைப்பினைக் கலைத்துப் புதிய ஒரு நிர்வாகத்தினைத் தெரிவுசெய்யுமாறு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டும் இவ் அமைப்பினை புனரமைக்க முன்வரவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஊரியான் கிராமத்தின் கமக்கார அமைப்பினை மாற்றிப் புதிய நிர்வாகத்தினைத் தெரிவு செய்யுமாறு கோரி விவசாயிகள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றினையும் அதன் பிரதிகளையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பிவைத்திருந்தனர். இக்கடிதத்தில் மானிய முறையில் வழங்கப்பட்ட விதை நெல்லினை அமைப்பில் உள்ளவர்கள் மோசடி செய்துள்ளதுடன், சரியான முறையில் விவசாயிகளுக்கு வழங்கவில்லை எனவும தொடர்ந்து உரமானியங்களில் மோசடிகளைச் செய்து அதனைக கூடிய விலைகளில் விற்பனை செய்தமையும் அத்துடன் ஐ.சி. ஆர்.சி இனால் வழங்கப்பட்ட இரண்டு இரு சக்கர உழவூர்திகளையும் தலைவரும் செயலாளரும் தமது தேவைகளுக்கே பயன்படுத்தினர். ஆனால் விசேட தேவைக்குப்பட்ட எவருக்கும் பயன படுததவில்லை. அத்துடன் (D.R.C) நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உழவு இயந்திரத்தினையும் அமைப்புச் சார்ந்தவர்களே பயன்படுத்திவருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் மக்கள் நலன்களில் அக்கறையற்ற இவ் அமைப்பினைப் புனரமைக்க வேண்டும் என பலரும் கருத்துத தெரிவித்துள்ளனர். (110)

# வட்டக்கச்சியில் பௌர்ணமி உற்சவம் அலையெனத் திரண்டனர் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயிலில் சித்திரைப் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சுதர்சன யாகம் மற்றும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுள்ளன.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக ஒவ்வொரு பௌர்ணமி தினமும் சுதர்சன யாகம் நடைபெற்று வருகிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை சித்திரை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு காலை 10 மணிக்கு சுதர்சன யாகம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பூசைகள் இடம்பெற்று மகா பிரசாதம் வழங்கப்பட்டது. கடந்த காலத்தைவிட இந்த வருடம் பெருமளவான மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (110)

# கடல் விபத்தில் சிக்கிய மியன்மார் மீனவர்கள்

## கை கொடுத்துக் காப்பாற்றிய இலங்கையர்

சர்வதேசக் கடற்பரப்பில் ஆதரவு அற்ற நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்த மேலும் மூன்று மியன்மார் மீனவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுக் காலை இலங்கை மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளதாக மீன்பிடித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் இருந்து 360 கடல் மைல்களுக்கு அப்பால் தத்தளித்துக் கொண்டிருந்த மியன்மார் மீனவர்களை, இலங்கை மீனவர்களின் "டெலிஸ் 6" என்ற படகே காப்பாற்றியுள்ளதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 13ஆம் திகதியும் இதே போல கடல்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த 11 மியன்மார் மீனவர்களும், இலங்கை மீனவர்களால் காப்பாற்றப்பட்டிருந்தனர். இவ்வாறு மீட்கப்பட்ட 11 மீனவர்களும், திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதன் பின்னர் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

அவர்கள், பின்னர் கொழும்பில் உள்ள மியன்மார் தூதுவராலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்தார்.

# மருந்து உற்பத்தி அதிகரிக்கத் திட்டம்

இலங்கை மருந்தாக்க கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்படும் மருந்து வகைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் மருந்துக்களின் அளவை மட்டுப்படுத்த முடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், தற்போது 47 வகையான மருந்து வகைகளை உள்நாட்டில் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உள்ளூரில் தயாரிக்கப்படும் மருந்து வகைகளை 200 ஆக அதிகரிக்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது இதற்கான அமைச்சரவையின் அனுமதி தற்போது பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சன்.சீ.கப்பலில் கனடா சென்றவர்கள் ஆட்கடத்தலுடன் தொடர்புபடவில்லை

(கொழும்பு)

எம்.வீ சன் சீ கப்பல் மூலம் கனடாவுக்குள் கடந்த வருடம் பிரவேசித்த குடியேற்றவாசிகள் 492 பேரும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குடியேற்றவாசிகள் தொடர்பில் கனேடிய குடிவரவு மற்றும் குடியகல்வு அகதிகள் சபையினால் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற விசாரணையில் குடியேற்றவாசி ஒருவர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி, இந்த விடயத்தை முன்வைத்து வாதாடியதாக வான்கூர்சன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் மேற்கொண்டு வருகின்ற கனேடிய குடிவரவு மற்றும் குடியகல்வு அகதிகள் சபையின் முகாமைத்துவ சட்டத்தரணி, சன் சீ கப்பல் நாட்டிற்குள் பிரவேசித்தமை சிககலான ஒருவிடயம் எனக் குறிப்பிட்டார். எனினும் இந்த நடவடிக்கையானது நன்கு திட்டமிடப்பட்டு இலாபமீட்டும் நோக்கில் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிழக்கு பல்கலைக்கழகம் நாளை மீண்டும் திறப்பு

கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி கிழக்கு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றினை அடுத்து மூடப்பட்டப்பட்ட பல்கலைக் கழகம் நாளை மீண்டும் திறக்கப் பட்டவுள்ளதாக பல்கலைக் கழகத்தின் பதில் உபவேந்தர் கே.பிரேமகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதுதொடர்பில் மாணவர் ஒன்றியத்துடன் நிர்வாகம் எந்த விதமான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளாத நிலையிலேயே தன்னிச்சையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் ரி.கிஸ்ணகாந் தெரிவித்துள்ளார்.

# விரிவுரையாளர் தொடர்பில் பேச்சு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதனம் தொடர்பான பிரச்சனைகள் தொடர்பில நேற்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவுடன் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இந்த சந்திப்பின்போது, தொண்டர் சேவையாளர்களை நீக்க எடுக்கப்பட் தீர்மானம், மற்றும் உயர்தர வினாத்தாள்களை திருத்துது தொடர்பான விடயங்கள் குறித்தும் இந்த கலந்துரையாடலின் போது விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

# அரச ஊழியர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக, மத்திய வங்கியினால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை 12 லட்சத்து 99 ஆயிரத்து 102 என மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த எண்ணிக்கையானது, 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1:1 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

இதனடிப்படையில் 2009 ஆண்டு 13 லட்சத்து 13 ஆயிரத்து 584 அரசாங்க ஊழியர்கள் சேவையில் இருந்தனர். இது தவிர கூட்டுத்தாபனங்கள் சபைகள் போன்றவற்றில் 2 லட்சத்து 71 ஆயிரத்து 923 ஊழியர்கள் பணியாற்றியதாக மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

### நடந்து முடிந்தது...

செய்யும்போது பொறுப்புள்ள அரசாங்கம் செயற்படாமலிருக்க முடியாது. இவ்வன்முறைச் சக்திகளை கட்டுப்படுத்துவதற்கு ஏனைய அரசாங்கங்களைப் போலவே இலங்கை அரசாங்கமும் நடவடிக்கை மேற்கொண்டது என அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஆயுதப் படையினரும், பொலிஸாரும் நாட்டையும், மக்களையும் பாதுகாக்கும் தமது கடமைகளைச் செய்துள்ளதாகவும், இம்மனிதாபிமான நடவடிக்கையின்போது அப்பாவி தமிழ் மக்களுக்கு அரசாங்கம் எவ்வித பிரச்சினையையும் ஏற்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

### புலி ஆதரவுப்...

தாம் வாழும் நாடுகளில் உருவாக்க முனைவதன் மூலம் தொடர்ந்தும் அந்த நாடுகளில் வசதியாக வாழ முயற்சிப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் உபய மெதவல குற்றம் சாட்டியுள்ளார். அத்துடன் அவர்கள் இலங்கையில் தொடர்ந்தும் முரண்பாடுகளும் மோதல் நிலைகளும் தொடர்வதாக போலிப் பிரச்சாரமொன்றை மேற்கொள்வதுடன், அவ்வாறான போலிச் சாட்சியங்களை உருவாக்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சட்டத்திற்குப் புறம்பாக போலியான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள அவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகள் அவதானமாக இருக்க வேண்டுமென்பதுடன், அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கிழக்கு நோக்கி...

மொழியாக அரபு மொழி சேர்க்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகர சபையின் தலைவர் எஸ்.எச்.மொஹமட் அஸ்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படாத மொழியொன்று பெயர்ப் பலகையில் இடம் பெற்றிருப்பதை சர்ச்சைக்குரிய விடயமாகதான் கருதவில்லை என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

நான்காவது மொழியாக அரபு மொழி இடம்பெறுவதற்காக மத்திய மற்றும் மாகாண உள்ளூராட்சி அமைச்சுகளிடமிருந்து எவ்வித அனுமதியையும் தான் பெறவில்லை என்றும் நகரசபைத் தலைவருக்குரிய அதிகாரத்தை பயன்படுத்தியே பெயர்ப் பலகையில் அரபு மொழியைச் சேர்த்ததாகவும் காத்தான்குடி நுழைவாயிலில் அமைந்திருந்த வரவேற்பு வளைவில் ஏற்கனவே அரபு மொழிக்கும் இடமளிக்கப்பட்டிருந்தாகவும் அவர் தெரிவித்தார்.

### சர்வதேச அழுத்தத்துக்கு...

இவ்வளவு காலமும் எமது வலிமையை நாம் வெளிப்படுத்தவில்லை. ஆனால் மே தினத்தில் நாம் எமது வலிமையை வெளிப்படுத்துவோம் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

இலங்கையில் புலிகளுக்கு எதிரான போரின் கடைசிக் கட்டத்தில் போர்க் குற்றங்களும், மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்களும் இடம்பெற்றதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இருப்பதாக ஐ.நா. நிபுணர்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார்.

புலிகளின் கோரிக்கையின்படி நாட்டை பிளவுபடுத்துவதற்கு தான் அனுமதிக்காததால் சர்வதேச சமூகத்தில் ஒரு பகுதியினர் இலங்கைக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொள்வதுடன், பொறாமை கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் சுமத்தப்பட்ட போர்க் குற்றச்சாட்டுகள் புதியதல்ல, போருக்குத் தலைமை தாங்கியவர்கள் போர்க்குற்ற விசாரணை மன்றத்திற்குகொண்டு செல்லப்பட வேண்டுமென அதிகமானோர் கூறியிருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக மின்சார நாற்காலியில் அமர வலியுறுத்தப்பட்டாலும் நான் அதை மகிழ்ச்சியுடன் செய்வேன் எனவும் ஜனாதிபதி கூறினார்.

# இராஜதந்திர அணுகு முறையில் அரசு பலவீனம் அதுவே போர்க்குற்ற அழுத்தத்துக்கு காரணம்

## அரசு மீது ஜே.வி.பி. பாய்ச்சல்

(கொழும்பு)


அரசாங்கத்தின் தூர நோக்கமற்ற சிந்தனை மற்றும் இராஜதந்திர அணுகு முறைகளில் காணப்பட்ட திறனற்ற செயற்பாடு ஆகியவையே போர்க்குற்ற அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாகவும், நிபுணர்கள் குழுவின் அறிக்கை நாட்டின் சுயாதீனத்திற்கும், இறையாண்மைக்கும் சவாலாக உள்ளதாகவும் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மனிதவுரிமைகளுக்கு மதிப்பளித் திருந்தால் இலங்கைக்கு இவ்வாறனதொரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டி ருக்காது எனவும் அவர் கூறியுள்ளார். இவ் விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் தேசியப் பிரச்சினை தொடர்பிலான அரசாங்கத்தின் இரட்டை வேடத்தினாலேயே அந்நிய நாடுகளின் தலையீடு இலங்கை மீது அதிகரித்துள்ளது. உள்நாட்டில் சர்வதேசத்திற்கு அடி பணியப் போவதில்லை எனக் கூறிக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுக்காகவும், ஏனைய நாடுகளின் உதவிகளுக்காகவும் அரசாங்கம் மண்டியிடுகின்றது.

அரசாங்கம் தேசிய பிரச்சினைகள் தொடர்பில் பொறுப்பற்றதாகவும், பாராமுகமாகவுமே செயற்படுகின்றது. இதனால் இன்று இலங்கை போர்க்குற்ற அச்சுறுத்தலில் சிக்கித் தவிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கால யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேசம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்த போது, அரசாங்கம் பொறுப்பற்ற தன்மையுடனேயே செயற்பட்டது.

இதற்கான விசாரணைகளுக்கு ஐ.நா நிபுணர் குழுவை நியமிக்கும் போது அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் முகங் கொடுக்காமல் பங்காளிக்கட்சிகளை



இணைத்து ஆர்ப்பாட்டங்களையே முன்னெடுத்தது. தீர்கமாகச் செயற்பட்டு சர்வதேசத்தின் கேள்விகளுக்கு பதிலளித்திருந்தால் இன்று இலங்கைக்கு எதிராக அமெரிக்காவோ, ஐக்கிய நாடுகள் சபையோ அறிக்கைகளை வெளியிட்டிருக்காது என அவர் மேலும் தெரிவித்தார்.



# விடாது தொடரும் உட்கட்சிப் பூசல்

## ஐ.தே. கட்சிக்கு புதிய தலைவலி

(கொழும்பு)


ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மீண்டும் உள்வாங்கப்படாவிட்டால் தான் பதவி துறக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கான போட்டியின் போது சஜித் பிரேமதாசவை ஆதரித்த புத்திக பத்திரண, ரோசி சேனநாயக்க, இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் ஆகியோர் கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து அண்மையில் இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

சஜித் பிரேமதாசவை ஆதரித்த அணியிலிருந்து தற்போது தயாசிறி ஜயசேகர மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிப் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டு, கட்சியின் முக்கிய பதவியொன்றில் இருக்கின்றார்.

அவ்வாறான நிலையில் கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட மேற்படி மூவரையும் மீண்டும் கட்சியின் செயற்குழுவுக்கு நியமிக்கும்படியும், இல்லாது போனால் தான் கட்சியில் வகிக்கும் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் இராஜினாமாச் செய்யப்போவதாகவும் தயாசிறி ஜயசேகர அறிவித்துள்ளார்.

# சக்தி வாய்ந்த பிரமுகர் வரிசையில் ஜனாதிபதிக்கு நான்காம் இடம்



(கொழும்பு)

டைம்ஸ் சஞ்சிகையினால் மேற்கொள்ளப்பட்ட, சர்வதேச ரீதியாகப் பலம் வாய்ந்த நூறு பிரமுகர்கள் பட்டியலில் ஆறாவது இடத்தில் இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் வாக்குகளைப் பெற்று நான்காவது .இடத்திற்கு முன்னேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டைம்ஸ் சஞ்சிகையும் சி.என்.என்.தொலைக் காட்சி வலையமைப்பும் இணைந்து மேற்கொண்ட இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வருகின்றது.இந்த கருத்துக் கணிப்பு எதிர்வரும் வியாழக் கிழமை 21 ஆம் திகதி வரை இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, வாக்களிக்க விரும்புபவர்கள் தமது வாக்குகளை www.time.com என்ற இணையத்தளத்தின் ஊடாக அளிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இதுவரையில் ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 41வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வாக்களிக்கப்பட்ட அரசியல் தலைவர்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கே அதிக வாக்குகள் கிடைத்துள்ள அதேவேளை, சீன ஜனாதிபதி ஹு ஜிந்தாகோ 28 ஆவது இடத்திலும், அமெரிக்க ஜனாதிபதி 46 ஆவது இடத்திலும் உள்ளனர். ரஷ்யாவின் தற்போதைய பிரதமர் விளாடிமீர் புட்டின் 73 ஆவது இடத்திலும் இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி 99 ஆவது இடத்திலும் உள்ளனர்.

# உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு; ஐ.நா வுக்கு அதிகாரம் எதுவும் கிடையாது

## நெருப்பெடுக்கிறார் பேராசிரியர் ரொஹான் குணரட்ன

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு சட்ட ரீதியான அதிகாரம் கிடையாது என பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான அமைப்பின் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.இலங்கையில் இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவிற்கு அதிகாரமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் மற்றும் அதிகாரிகளின் அனுமதியின்றி தன்னிச்சையாக பான் கீ மூனினால் நிபுணர் குழுவொன்றை அமைப்பதற்கு முடியாது எனவும், அது சட்டத்திற்கு முரணானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டம் அல்லது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் பெரும்பான்மை நாடுகள் தீர்மானம் நிறைவேற்றினால் மட்டுமே இவ்வாறான விசாரணைக் குழுக்களை நிறுவ முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாதர் சங்கத்துக்கு புதிய கட்டிடம் ஜெய்க்கா நிறுவனம் நிதியுதவி

## நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் அடிக்கல் நாட்டினார்



(யாழ்ப்பாணம்)

ஜெய்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலணை கிழக்கு கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கான புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்று

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் கலந்து கொணடு புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வேலணைப் பிரதேச அமைப்பாளர் சிவராசா (போல்), ஜெய்கா நிறுவன இலங்கைக்கான பிரதிநிதி, ஜெய்கா நிறுவன உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர், வேலணை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினையும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் பார்வையிட்டதுடன் சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பாகவும் சங்கப்பிரதிநிதிகளுடன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.


# புத்தாண்டுவேளையில் சுனாமி வதந்தி கிளப்பியவர் கைது

புது வருட தினமான 14 ஆம் திகதி சுனாமி கடல் சீற்றம் ஏற்படப் போகின்றது என பொய்யான வதந்தியை பரப்பினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதேவேளை, சுனாமி தொடர்பிலான அறிவித்தல் எவையும் முன்கூட்டியே வழங்க முடியாது என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில், அவ்வாறான நிலைமை ஏற்படும் பட்சத்தில், அது தொடர்பான துரித அறிவித்தலை மக்களுக்கு வழங்கும் பொருட்டு சகல தயார் நிலைகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், இதனால் மக்கள் வீணாக பீதியடைய வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. 


A, B, C, D, E, F ஆகிய ஆறு நகரங்களை இணைக்கும் பாதைகள் கீழே உருவப் படத்தின் மூலம் தரப்பட்டுள்ளன. அவற்றில் D எனும் நகரத்திலிருந்து E நகரத்தினூடாக F எனும் நகரம் வரைக்குமான தூரம் யாது?

1. 8 km    2. 17 km    3. 14 km

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

31. அசுத்தமான நீரைப் பருகுவது தடுக்கப்படல் வேண்டும். அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
   1) அசுத்தமான நீர் சுவை குறைந்தது என்பதால் ஆகும்.
   2) நோய்கள் பரவும் என்பதால் ஆகும்.
   3) அசுத்தமான நீர்த் தட்டுப்பாடு என்பதால் ஆகும்.

32. இலங்கை ஒரு தீவு ஆகும். அவ்வாறு கூறப்படுவது.
   1) இலங்கையைச் சுற்றிக் கடல் இருப்பதனால் ஆகும்.
   2) இலங்கை- இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் ஆகும்.
   3) இலங்கை மாங்காய் வடிவில் அமைந்திருப்பதனால் ஆகும்.

33. இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் வேண்டும். அதற்குக் காரணம்.
   1) பல் துலக்கிய பின் நன்கு தூங்கலாம் என்பதால் ஆகும்.
   2) பல் பாதுகாக்கப்படும் என்பதால் ஆகும்.
   3) பற்கள் சக்தி பெறுகின்றன என்பதால் ஆகும்.

34. மாணவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் வாசிப்பது சிறந்த ஓர் பழக்கமாகும். காரணம்.
   1) புத்தகங்கள் வாசிப்பதனால் அறிவு விருத்தியடையும் என்பதாலாகும்.
   2) புத்தகங்களின் விலை குறைவு என்பதாலாகும்.
   3) ஆசிரியர்களும் புத்தகங்களையே வாசிக்கிறார்கள் என்பதனாலாகும்.

35. 0.001, 0.01, 0.1, 0.0001 இவைகளில் பெரிய எண்.
   1. 0.001    2. 0.01    3. 0.1


36. நூறாயிரத்துப் பதினைந்து. இதனை இலக்கத்தில் எழுதுக.
   1. 10015    2. 100015    3. 1500000

**பின்வரும் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**

37.
   1) வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கிறது.
   2) அரிசி ஒருவகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்.
   3) புடலங்காய் ஒருவகைக் காய்கறி. புடலங்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

38.
   1) நாய் வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது.
   2) காகம் ஒரு பறவை. அது தாவரவுண்ணி.
   3) மனிதன் இரண்டு கால் விலங்கு. அவன் முலையூட்டி வகைக்குரியவன்.

**இப்படங்களில் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டுகிற விடையின் கீழ்க் கோடிடுக.**

39. 
A    B    C    D

1) BACD
2) ACBD
3) BCDA
4) ACDB

40. மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால்முகம் கழுவி, ஆயத்தமாகிப் பாடசாலை சென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?




1) 2, 5, 3, 4, 1    2) 2, 4, 1, 3, 5    3) 4, 3, 5, 1, 2







தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - I
நேரம் -45 நிமிடம்
கல்வி முரசு
வெளியீடு 10



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே முதலில் தரப்பட்டுள்ள உருவப் படத்துடன் தொடர்புடைய உருவப் படத்தை அதற்கு எதிரே தரப்பட்டுள்ள உருவப் படங்களிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

01. 
1    2    3

02. 
1    2    3

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

03. அதிகாலையில் சேவல் கூவுவது.
   1) தூங்குபவர்களை எழுப்புவதற்காக.
   2) இருள் மறைந்து ஒளி வரப்போவதை உணர்த்துவதற்காக
   3) தனது இறக்கைகளை அடிக்க வேண்டுமென்பதற்காக

04. ‘கடி நாய் கவனம்’ என்பது ஒரு
   1. கட்டளை    2. வேண்டுகோள்    3. ஆபத்தைக் குறிக்கும் வாக்கியம்

05. எனது வயது 36. எனது அம்மாவின் வயது எனது வயத்தின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவாகுமெனின் நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
   1. 30    2. 34    3. 36

06. அஜித் என்பவன் சஜித் என்பவனையும் விட இரு ரொபிகள் அதிகமாகவும், ரஜித் என்பவனையும் விட நான்கு ரொபிகள் அதிகமாகவும் வைத்துள்ளான். அஜித்திடம் 10 ரொபிகள் இருப்பின் மூவரிடமும் உள்ள ரொபிகள்.
   1. 12    2. 24    3. 36

07. தேங்காயின் விலை அதிகரிக்கின்றமைக்கான காரணம்.
   1. தென்னை மரங்களுக்கு உரம் போடாமை.
   2. தென்னங் காணிகள் பெருமளவில் விற்கப்படுதல்.
   3. தென்னை உற்பத்தி குறைவது.

08. ரமணியின் வயது ரூபினியின் வயதின் அரைவாசியாகும். ரூபினியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினது வயனதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனில், தர்சினிக்கு எத்தனை வயது?
   1. 15    2. 18    3. 20

09. ஒரு வாங்கிலில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் இருந்து கண்கிடும் போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறு பக்கத்திலிருந்து கணக்கிடும்போது அவள் ஆறாவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்.
   1. 18    2. 19    3. 21


10. வரட்சியான காலங்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பதற்கான காரணம்.
    1. அக்காலங்களில் மரக்கறிகளின் உற்பத்தி மிகக் குறைவு என்பதால்.
    2. விவசாயிகள் அக்காலங்களில் மரக்கறி உற்பத்தியை விரும்பாததால்.
    3. அக்காலங்களில் போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லாமையால்.


11. மண்ணரிப்பு உள்ள இடங்களில் தாவரங்கள் நன்கு வளராமைக்கான காரணம்.
    1. அவ்வகையான இடங்களில் நீர் அதிகம் தேங்கி நிற்பதால்.
    2. தாவரங்கள் வளர்வதற்குப் பொருத்தமான மண் அத்தகைய இடங்களில் இல்லாமையால்.
    3. தாவரங்கள் வளர்வதற்குத் தேவையான மண்ணானது ஓடும் நீருடன் அடித்துச் செல்லப்படுவதால்.

12. எங்கள் ஊரிலுள்ள அனேகமான வீடுகள் ஓடுகளினால் வேயப்பட்டிருந்தன எனின் இதிலிருந்து கூறக்கூடியது.
    1. எங்கள் ஊரிலுள்ளவர்களில் அனேகமானவர்கள் செல்வந்தர்கள்.
    2. ஓடுகளினால் வேய்வது மற்றையவைகளையும்விட இலாபமானது.
    3. ஓடு போடப்படாத வீடுகளும் எங்கள் ஊரில் உள்ளன.

13. டானியல் என்பவர் கார் விபத்து ஒன்றில் இறந்துவிட்டார் எனின் இதிலிருந்து கூற முடியாதது.
    1. கார்ச் சாரதி மதுபோதையில் வண்டியை ஓட்டியிருப்பார்.
    2. கார் வேகமாக வந்து டானியலை மோதியிருக்கலாம்.
    3. டானியல் பாதை ஓரமாக அவதானத்துடன் நடந்து சென்றிருப்பார்.

14. வயற்காட்டிலிருந்த மாடுகள் எல்லாம் தங்களது வால்களால் ஈக்களைத் தாக்கின எனின், இதிலிருந்து கூறக் கூடியது.
    1. வயற்காட்டிலிருந்த எல்லா மாடுகளுக்கும் ஈக்களைத் தாக்கக் கூடியளவிற்கு நீண்ட வால் இருந்திருக்கும்.
    2. ஈக்களைத் தாக்குவது மாடுகளின் பொழுதுபோக்காகும்.
    3. ஈக்கள் மாடுகளுக்குக் கொடுத்த தொந்தரவாலேயே அவ்வாறு தாக்கியிருக்கலாம்.

15.

① ② ③


16.

① ② ③

**17ஆம், 18ஆம் வினாக்களில் முதலில் அமைந்துள்ள வாக்கியத்தின் அதே கருத்தைக் கொடுக்கக் கூடிய விடையை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

17. மலையைப் பார்த்து நாய் எவ்வளவுதான் குரைத்தாலும் மலை ஒருபோதும் சரியாது.
    1. மலை நாயையும் விடச் சக்தி வாய்ந்தது.
    2. மலை ஒருபோதும் சரியாது.
    3. கெட்டவர்களுடைய தீய வார்த்தைகளால் நல்லவர்களை ஏமாற்ற முடியாது.


18. ஆற்றில் நீரைக் குடித்துவிட்டுக் கடலுக்கு நன்றி சொல்லுதல்.
    1. ஆற்று நீரானது கடலிலிருந்தே பெறப்படுகின்றது.
    2. ஒருவரிடமிருந்து உதவியைப் பெற்றுவிட்டு வேறொருவருக்கு நன்றி கூறுதல்.
    3. கடல் நீரை ஒருபோதும் குடிக்க முடியாது.

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

19. சதுரமுகி வடிவிலமைந்துள்ள இப்பெட்டியை விரிக்கும்போது தோன்றக்கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?







20.


எல்லாப் பக்கங்களும் சமனாக அமைந்திருந்த காட்போட் பெட்டி ஒன்றை விரித்தபோது அது அருகேயுள்ளவாறு இருந்தது எனின் அப்பெட்டியின் உயரம் என்ன?

**மாணவர்கள் சிலர் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகள் குறியீடுகளால் தரப்பட்டிருப்பதுடன், அவற்றின் மொத்தப் புள்ளிகளும் கீழேயுள்ள அட்டணையில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி அதன் கீழ்க் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| பெயர் | 1 ஆவது பாடம் | 2 ஆவது பாடம் | 3 ஆவது பாடம் | 4 ஆவது பாடம் | 5 ஆவது பாடம் | பெற்ற மொத்தப புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| சமன் | □ | □ | □ | △ | △ | 400 |
| தாரகா | △ | △ | △ | △ | △ | ---- |
| நளாயினி | □ | △ | ○ | ○ | ○ | 375 |
| விமல் | □ | □ | ○ | ○ | △ | ---- |
| றமணி | □ | □ | □ | □ | □ | 500 |

21. தாரகா பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
    1. 250 2. 200 3. 300
22. றமணி பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும், விமல் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?
    1. 300 2. 200 3. 100
23. 5 மாணவர்களும் சேர்ந்து அதிகூடிய புள்ளியைப் பெற்றது எப்பாடத்தில்?
    1. 2ஆம் பாடம் 2. 1 ஆம் பாடம் 3. 3ஆம் பாடம்
24. ஐந்து பேரும் சேர்ந்து, ஐந்து பாடங்களிலும் பெற்றுள்ள மொத்தப் புள்ளிகள் எத்தனை?
    1. 1850 2. 1900 3. 1925

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

25. நீர்வீழ்ச்சி ஒன்றில் காண முடியாதது.
    1. நீர் மேலிருந்து கீழ்நோக்கி விழுதல் 2. படகுகள் செல்லும் காட்சி
    3. கற்களின் மேல் நீர் விழுதல் 4. கண்ணைக் கவரும் காட்சி
26. புதிதாகப் பிறந்த குழந்தையிடம் இல்லாதது.
    1. சிவப்பு நிறமான தோல் 2. தலை நிறைய முடி
    3. சிறு பற்கள் 4. நன்றாகப் பார்க்கக் கூடிய கண்கள்
27. மலர்களில் இல்லாதது.
    1. விதம் விதமான வடிவங்கள் 2. பல்வேறுபட்ட இதழ்கள்
    3. நீண்ட தண்டு 4. பல்வேறுபட்ட நிறங்கள்

**கீழே முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தானது பிழையாக அமைந்திருப்பதற்குரிய காரணத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

28. வெளிச்சமற்ற காட்டு வழியாகத் தடுமாறியபடி பயணம் செய்துகொண்டிருந்த தாத்தா தனது சட்டைப் பையிலிருந்து மூக்குக் கண்ணாடியைப் போட்டவுடன் ஒழுங்காக நடந்து சென்றார்.
    1. மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாலும் இருட்டில் பயணம் செய்ய முடியாது.
    2. இருட்டில் சட்டைப் பையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுக்க முடியாது.
    3. கண்ணாடி இருந்திருந்தால் பயண ஆரம்பத்திலேயே அவர் அதை அணிந்திருப்பார்.

**முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் அதே கருத்தைத் தரக்கூடிய வாக்கியத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

29. திருடுவதில் ஆர்வமுடைய பிரணவன் குடிப் பழக்கமுடைய சிங்காரத்துடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டான்.
    1. ஜாடிக்கேற்ற மூடியைப் போல
    2. வேப்பிலை மரத்தில் பாகற்கொடி படர்ந்ததைப் போல
    3. கெடுவான் கேடு நினைப்பான் என்பதைப் போல